இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 51 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 12 – வெள்ளிக்கிழமை 29 செப்டம்பர் 2023 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 51: Thiruvalluvar Year - 2054 - Purattasi 12 - Friday 29 September 2023 - Dak 10 Pages ₹ 5.00

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்தியாவிலேயே முதன் முதலாக அறிமுகப்படுத்திய

# காலை உணவுத் திட்டத்திற்கு நாடு முழுவதும் வரவேற்பு!

## தெலுங்கானா அரசும் அமல்படுத்துகிறது!



**சென்னை, செப்.29-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்திய பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டம், தற்போது நாடு முழுதும் பெரும் வரவேற்பைப் பெற்று வருகிறது. இத்திட்டத்தை தெலுங்கானா அரசும் அமல்படுத்த முடிவு செய்துள்ளது.**

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்கு காலை உணவினை பரிமாறி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.9.2022 அன்று தொடங்கி வைத்து, மாணவர்களுடன் உணவருந்தினார்.

**நகராட்சிப் பகுதிகளுக்கு விரிவுபடுத்திய திட்டம்!**

முதற்கட்டமாக, தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில், இத்திட்டத்தினை செயல்படுத்திட ரூ.33.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 417 மாநகராட்சி பள்ளிகளில் 43,681 மாணவர்கள், 163 நகராட்சி பள்ளிகளில் 17,427 மாணவர்கள், 728 வட்டாரம் மற்றும் கிராம ஊராட்சி பள்ளிகளில் 42,826 மாணவர்கள், 237 தொலைதூர, மலைபிரதேச பள்ளிகளில் 10,161 மாணவர்கள், என மொத்தம் 1,545 பள்ளிகளில் தொடங்கப்பட்டு, 1,14,095 மாணவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகின்றனர். மேலும், 28.02.2023 முதல் இத்திட்டம் மேலும் நீட்டிக்கப்பட்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட செயலியின் படி 1,005 நகர்ப்புற மையங்களில் 1,12,883 குழந்தைகளும், 963 கிராமப்புற மையங்களில் 41,225 குழந்தைகளும் பயனடைந்து வருகின்றனர்.

**தமிழ்நாடு முழுதும் விரிவாக்கம் 17 லட்சம் மாணவர்கள் பயன் பெறுகின்றனர்!**

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பெரும்பாலான பொதுமக்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் மிகவும் பாராட்டப்பட்டு, மகிழ்ச்சியோடு வரவேற்கப்பட்டு வருகிறது. இந்த முயற்சியின் பயனாக, பள்ளிகளில் மாணவர்களின் வருகை எண்ணிக்கை முன்பு இருந்ததைவிட அதிகரித்துள்ளது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு, இந்தத் திட்டத்தினை 2023-2024ஆம் ஆண்டு, படிப்படியாக மாநிலத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கும் விரிவாக்கம் செய்திட அரசு முடிவு செய்துள்ளது என்று முதலமைச்சர் அவர்கள் 13.1.2023 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்.

**திட்டத்தை விரிவுபடுத்த ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு!**

அதன் தொடர்ச்சியாக, 2023-24ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், 'பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றி கல்வியறிவு பெற்றிடவும் எந்தத் தியாகத்தையும் செய்திடுவோம்' என்ற முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கத்தை செயல்படுத்திட, வரும் கல்வி ஆண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை பயிலும் மாணவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இந்த நல்ல நோக்கத்திற்கு வரும் நிதியாண்டில் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், ரூ.404.41 கோடி செலவில் 31,008 பள்ளிகளில் பயிலும் 17 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தை விரிவுப்படுத்தி தொடங்கி வைக்கும் விதமாக திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உணவு பரிமாறி, அவர்களுடன் கலந்துரையாடி உணவருந்தினார்.

**தமிழ்நாட்டில் ஆய்வு மேற்கொண்ட தெலுங்கானா அரசு!**

தற்போது தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நாடு முழுவதும் பலத்த வரவேற்பை பெற்று வருகிறது. காலை உணவுத் திட்டத்தை தங்களது மாநிலங்களிலும் செயல்படுத்த ஏதுவாக பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகள் வருகை தந்து ஆய்வு மேற்கொண்டனர்.

அண்மையில் தமிழ்நாட்டில் ஆய்வு மேற்கொண்ட தெலுங்கானா அரசு அதிகாரிகள் அடங்கிய குழுவினர் சென்னையில் உள்ள அரசு பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் செயல்பாடுகளை கேட்டறிந்தனர்.

தமிழ்நாட்டைப் பின்பற்றி தெலுங்கானாவில் 1ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்திற்கு 400 கோடி ரூபாய் மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த கனவுத் திட்டமான பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் தற்போது இந்தியா முழுதும் மற்ற மாநிலங்களும் பின்பற்றத் தொடங்கியிருப்பது வரலாற்றுச் சிறப்பாக அமைகிறது.

# இன்று அவசரமாக கூடுகிறது காவிரி மேலாண்மை ஆணையம்!

புதுடெல்லி, செப்.29-

தமிழ்நாட்டிற்கு 3,000 கனஅடி தண்ணீர் திறக்க ஒழுங்காற்றுக் குழு பரிந்துரைத்துள்ளது. ஒழுங்காற்றுக்குழு பரிந்துரைத்த நிலையில் காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

தமிழ்நாட்டுக்கு வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடி நீர் திறக்குமாறு கர்நாடக அரசுக்கு காவிரி ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டுள்ள நிலையில், காவிரி மேலாண்மை ஆணையத்தின் அவசரக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

டெல்லியில் நடைபெற்ற காவிரி ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தில் தமிழ்நாடு மற்றும் கர்நாடக அதிகாரிகள் காணொலி மூலம் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டுக்கு வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடி நீர் திறக்குமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டது.

இந்நிலையில், காவிரி மேலாண்மை ஆணையத்தின் அவசரக் கூட்டம் இன்று டெல்லியில் நடைபெற உள்ளது.

காவிரி மேலாண்மை ஆணையத்தின் தலைவர் எஸ்.கே.ஹல்தர் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் இருமாநில அதிகாரிகள் பங்கேற்க உள்ளனர். காவிரி ஒழுங்காற்றுக் குழு உத்தரவை கர்நாடக அரசு பின்பற்ற வேண்டும் என இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு அரசு அதிகாரிகள் வலியுறுத்த உள்ளனர்.

# 5 மாநிலத் தேர்தல் விரைவில் அறிவிப்பு!

புதுடெல்லி, செப்.29-

தெலுங்கானா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் மற்றும் மிசோரம் உள்ளிட்ட 5 மாநில சட்டசபை தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. இதற்காக தேர்தல் ஆணைய அதிகாரிகள் அக்டோபர் 3-ந்தேதி முதல் 6ந்தேதி வரை 5 மாநிலங்களில் சுற்றுப்பயணம் செல்கின்றனர். அப்போது 5 மாநிலங்களின் அரசியல் கட்சி பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர்கள், டி.ஜி.பி.க்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுடன் விரிவான ஆலோசனை நடத்த உள்ளனர்.

அனைத்து ஆலோசனைகளையும் அக்டோபர் 6-ந் தேதிக்கு முன்பு முடிக்க தேர்தல் ஆணையம் திட்டமிட்டு பணிகளை துரிதப்படுத்தி உள்ளது.

இதனால் அக்டோபர் 7 ஆம் தேதி தேர்தல் தேதி குறித்த அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2018ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலுக்கான தேதி அக்டோபர் 7-ந் தேதி வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் தலைமையில் அக். 13 - அன்று

# 'வாலிபப் பெரியார்' ஏ.வி.பி.ஆசைத்தம்பி நூற்றாண்டு விழா!


## திருவுருவப் படத்தை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

**சென்னை, செப்.29-**

**'வாலிபப் பெரியார்' ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழா கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களின் தலைமையில் அக்.13 அன்று நடைபெறுகிறது. இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களின் படத்தைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றுகிறார்.**

இதுகுறித்து தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

திராவிட முன்னேற்றக் கழக மூத்த முன்னோடிகளில் ஒருவரும் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் கழகத்தின் கருவூலம் தன்மான இயக்கத்தின் சிங்கம் தந்தை பெரியாரின் மாணவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புத் தம்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற தோழர் - கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலில், சட்டப்பேரவை உறுப்பினராகவும்: பின்னர் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு கழகக் கொள்கையினை நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலித்தவர்.



பெரியார் அவர்களுடைய உணர்வை தன்னுடைய சொற்பொழிவுகளிலே அப்படியே பிரதி பலிக்கின்ற ஒரு பேராற்றல் இருந்த காரணத்தாலேதான் வயதில் இளைஞராக இருந்தாலுங்கூட "வாலிபப் பெரியார்" என்று கழக நிர்வாகிகள் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்ட "ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழா" வையொட்டி, முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அவரது படத்தை திறந்து வைத்து, சிறப்புரை ஆற்றிட, கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் வருகிற 13-10-2023 (வெள்ளிக்கிழமை), மாலை 5.30 மணியளவில், சென்னை, "இராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெறுகிறது. சென்னை கிழக்கு மாவட்டம் இந்நூற்றாண்டு விழாவினை ஏற்பாடு செய்துள்ளது.

இவ்வாறு தலைமைக் கழக அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

# திராவிட சினிமா

**25**

**■ வீ.மா.ச.சுபகுணராஜன்**

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

# ‘அவன் பித்தனா?’ திராவிடம் ‘பேசும்’ படம்!

படங்கள் உதவி : ஞானம்







கலைஞர் திரைப்படங்களை மீள்பார்வையாகப் பார்க்கும்போது தொடர்ந்து பல வியப்புகளுக்கு ஆளாகியபடியிருக்கிறேன். ஒரு திரைப்பட ஆய்வாளனாகவே அவற்றை அணுகுகிறேன். அந்த அணுகுமுறை எப்போதும் நான் அறிந்த அளவிலான ஆய்வுப்புல கருத்தியல் அடிப்படைகளைக் கொண்டதாகவே இருப்பதை உறுதி செய்துகொள்கிறேன்.

என் எழுத்துகள் பிறரின் பரிசீலனைக்குள்ளாகும் சூழலில், எனது ஆய்வுப் பொருண்மைகள் வெற்று விதந்தோதல்கள் எனப் புறந்தள்ளப்பட்டு விடக்கூடாது என்பதில், மிகுந்த கவனத்துடன் செயல்படுகிறேன். என் எழுத்துகள் கலைஞருக்கு, அவருக்கில்லாத எந்தப் புகழையும் புதிதாக வழங்கிவிட முடியாது என்பதில் மிகத் தெளிவாக இருக்கிறேன். ஆனால், திராவிடக் கருத்தியல் வளத்தால் ஓர் ஆய்வாளனாக இருக்கும் எனது புரிதல்கள், அந்தப் படைப்புகள் குறித்த ஒரு சிறு புதிய திறப்புக்கும், அவை குறித்த குறை மதிப்பீடுகளுக்கும் பதில் இருப்பதற்கு வழிவகுக்குமானால், அதுவே நான் எனது திராவிடக் கருத்தியல் ஆசான்களுக்குச் செய்யும் நன்றி.

கலைஞர் திரைப்படங்கள் குறித்துத் தொடர்ந்து எழுதப்படும் எனது பார்வைகள், அவரை முதன்மையாக ஒரு திரைக்கதையாசிரியராகவே கொள்கிறது. அதைத் தொடர்ந்து அவரது வசனங்கள். ஒரு திரைக்கதை வகுக்கும் தடத்திலேயே திரைப்பட ஆக்கம் நிகழ்கிறது. அந்தத் தடம் காட்சிகளாகக் கட்டமைக்கப்படும்போது அவற்றிற்கான வசனத் தேவைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

ஒரு திரைக்கதையாசிரியர் ஓர் இயக்குநரின் பணிக்கான அடிப்படைகளை உருவாக்கிக் கொடுக்கிறார். ஒரு நிபுணத்துவம் பெற்ற திரைக்கதையாசிரியர் பெரும்பாலும் தான் எழுதிய கதைகளுக்குள் மட்டும் அதனைச் சுருக்குவதில்லை. ஏற்கெனவே நாம் பார்த்ததுபோலக் கலைஞர் ஒரு மாபெரும் திரைக்கதையாசிரியராக உருவெடுப்பது, அவர் பிறரது கதைகளுக்கு எழுதிய திரைக்கதைகள் வழியாகவே.

## கலைஞர் குரலில் கதை

‘அவன் பித்தனா?’ ஒரு தெலுங்குப் படத்தின் மறு ஆக்கமே. கலைஞரின் குரல் திரைப்படத்தை அறிமுகம் செய்கிறது. ஒரு பெரும் பணக்காரத் தந்தை தனது ஒரே மகனின் காதல் கலப்புத் திருமணத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். தனித்து வறுமையில் வாழும் மகன் நோயுற்று மரணப்படுக்கையில் இருப்பதாக அறிந்து, மனங்கலங்கி தன் தவற்றை உணர்ந்து செல்வதற்குள் மகனும் மருமகளும் இறந்துவிட்டதாக அறிகிறார்.

தனித்து விடப்பட்ட பேரன் ஒரு குடும்பத்தின் அரவணைப்பில் வளர்ந்து ஆளாகிறான். இந்தத் திரைக்கதையில் கலைஞரின் குரல் பேரன் குமார் வளர்ந்து வாலிபனாகி **‘அழகிரி டீக்கடை’** வைக்கும் வரை இடைவெளிவிட்டுத் தொடர்கிறது. அதாவது கதை சொல்லல், காட்சித்துண்டுகள், மீண்டும் கதை சொல்லும் கலைஞரின் குரல் எனத் தொடரும் உத்தி கையாளப்படுகிறது.

## உரத்துப் பேசிய சினிமாக்கள்

திராவிட சினிமாக்கள் குறித்த குறை மதிப்பீடுகளைச் செய்தவர்களின் முதன்மையான வாதம், அவை பேசுகின்றன, அதிலும் ‘உரத்துப் பேசுகின்றன’ என்பதே. திரைப்படம் என்பது காட்சிமொழி, படைப்பு உச்சத்தில் தனது கனத்த மொழியற்ற மௌனத்தால், கலைநயம் மிக்கக் காட்சிமொழியால் ‘பேச்சுக்கான’ இடத்தை நிரப்பி விடுகிறது. இந்தக் கருத்து நிலைப்பாட்டை முற்றிலுமாக மறுத்து விடாமல் மேலே தொடர்வோம்.

**கதையின் மூலம், தாத்தாவின் சொத்தை, அவரது மரணத்துக்குப் பிறகு பேரன், கழுகுக் கூட்டமான உறவுகளின் சதிகளை உடைத்து அடைவதுதான்.**

அந்தப் பேசாப் படங்கள் என்ன ‘பேசின?’. தேசியம், தெய்வீகம், பாவம், புண்ணியம், தியாகம், விதி, மோட்சம் எனும் உச்சாடனங்களால், மனித தன்னூக்கச் செயல்பாடுகளுக்கான முனைப்பை மழுங்கடித்தன. சமூக ஒழுங்கைச் சிதைத்துவிடாமல், அழுத்தும் பண்பாட்டுச் சிடுக்குகளைத் தனிமனித மீறல்கள் வழியாகக் கடப்பது அல்லது மனித இருப்பின் சாத்தியங்களை மீறிய ‘தியாகச் செம்மல்களை’ கொண்டாடுவது. இந்தப் பிணி இன்றும் விலகியதாய்த் தெரியவில்லை.

அறிவியல் கண்டுபிடிப்புகள், நாளும் மாறும் தொழிற்நுட்ப வளர்ச்சிகள், அதன் விளைவான பொருளாதார இயக்கம், அவை வெகுமக்கள் மீது செலுத்தும் விளைவுகள் என அனைத்தையும், ‘தன்னலமற்ற தியாகச் சீல நரேந்திர மோடிகள்’ தீர்த்து வைப்பார்கள் எனும் நம்பிக்கைவாதத்தினை விதைத்தது நேற்றைய ‘குடும்பமற்ற உன்னதத் தனிமனிதன்’ என்பதுதானே. பண்பாட்டு வேர்களில் பீடித்திருந்த மதவாத நோய்மையை அறுத்து எறியாமல், தத்துவ விசாரங்களால் விளக்கிய உன்னதங்களின் விளைவுதானே இன்றைய அவலத்தின் மூலம்.

## நவீனமும் பண்ணையார்த்தனமும்

இதில் வேதனை என்னவென் றால், சமூக மாற்றத்தை சோசலிசப் புரட்சிக் கருத்துகளால் மாற்ற விளைந்தவர்களும், திரைப்படங்களின் ஆக்கம் குறித்த புனிதக் கருத்தியல்களில் சிக்குண்டார்கள். படத்தில் கலைஞரின் ஒரு வரி, ‘இந்த மில் நிர்வாகம் பண்ணையடிமை முறையில் மில் நடத்துகிறது’. வேளாண் பண்ணையும் நூற்பாலையும் உற்பத்திமுறைகளில் முற்றாக மாறியவை. உற்பத்தி உறவுகள் வேறு வேறு. அன்றைய மில் முதலாளிகளின் பண்ணையார்த்தனம் நவீன உற்பத்தி முறை குறித்த அறிவின்மையின் விளைவு எனப் பொட்டிலறைகிறார் கலைஞர்.

தங்கள் நோக்கங்களில் தெளிவான வெகுமக்கள் திரைப்படம் ‘உரத்துதான்’ பேசும். **‘அவன் பித்தனா?’** படத்தின் காட்சிகளின் ஒவ்வொன்றிலும் பேசப்படுபவற்றைப் பட்டியலிடுவது முடியாத வேலை. ஆனாலும், இதோ, ‘பாட்டாளி பாவம்பா... பசியிருக்கும் போது சாப்பிடட்டும், காசிருக்கும் போது கொடுக்கட்டும். எனவே, இங்கே அழகிரி டீக்கடையில் **‘இன்று கடன் நாளை ரொக்கம்’** என்கிறான் கருப்புச் சட்டைக்காரன் நாயகன் குமார். கலைஞரின் கிண்டல் மொழி காட்சிகளின் வெளியெங்கும். ‘என்ன வடை இளைச்சிப் போச்சு அழகிரி. விலைவாசி ஏறுற வேகத்தில வடை இளைச்சிருச்சு அண்ணே’; ‘தம்பி கடன்னா என்ன... கடமைடா’ என்கிறான் அழகிரிக்கு உதவி செய்யும் தம்பியிடம். கடையில் சாப்பிடும் பெண்ணை வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டிருப்பவனிடம், ‘ஏம்பா உனக்குப் பசி கண்ணுலயா? வயித்துலயா?‘ என்கிறான்.

## இளகிய மனம்... இரண்டு வழிகள்...

தேர்தலில் பண விளையாட்டு, பஸ் பெர்மிட், பேக்டரி லைசென்ஸ், கலப்படம், கள்ளநோட்டு, கள்ளமார்க்கெட் என அனைத்தையும் அம்பலப்படுத்தும் கலைஞரின் திரைக்கதையமைப்பு மூலக்கதையின் முகத்தை மாற்றியிருப்பது வெளிப்படை. கதையின் மூலம், தாத்தாவின் சொத்தை, அவரது மரணத்துக்குப் பிறகு பேரன், கழுகுக் கூட்டமான உறவுகளின் சதிகளை உடைத்து அடைவதுதான். ஆனால், கலைஞர், பெரும் பணம் இளகிய மனம் கொண்ட ஒருவனிடம் கிடைக்கும்போது, அவன் முன் இருக்கும் இரண்டு வழிகளைப் பரிசீலிக்கிறார். ஒன்று, அதனை உல்லாசமாக அனுபவிப்பது. மற்றொன்று, தேவையென்போருக்கு வாரி வழங்குவது.

இரண்டாவது வழியில் வாரியிறைப்பவனைச் சுற்றம் ‘பித்தன்’ என்று பட்டம் கட்டித் துரத்துகிறது. கலைஞரின் முத்திரைக் காட்சியான வழக்காடு மன்றத்தில், சுற்றத்தாரும், உதவிப் பெற்றவர்களும் (புத்தி சீராக இருப்பவன் அள்ளி இறைக்க மாட்டான், மில் பங்குகளைத் தொழிலாளருக்கு வழங்குவானா எனும் பொதுப்புத்தியில்) ‘பித்தன்’ எனச் சூட்டும் பட்டத்தை, ‘கயவர்கள் மத்தியில் கடமை கண்ணியம் கட்டுப்பாடு எனப் பேசுவது பைத்தியக்காரத்தனம்தான்’ என வாதிட்டு தளைகளை உடைத்து வெளியேறுகிறான்.

இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன், விஜயகுமாரி, சகஸ்ரநாமம், நாகேஷ், சச்சு ஆகியோர் நடிப்பில் உமையாள் பிக்சர்ஸ் தயாரிப்பில், பார்த்தசாரதி இசையில், ப.நீலகண்டன் இயக்கத்தில், 1966-ஆம் ஆண்டில் இந்தப் படம் வெளியானது.

...படம் விரியும்

## கொஞ்சம் படிங்க, குஜ்ஜூஸ்!

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர் சந்தன்ஜி டாக்கோர். 27 வயதான அந்த இளைஞர், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு குற்றச்செயல் ஒன்றில் ஈடுபட்டதற்காகச் சிறையில் அடைக்கப்பட்டார். எனினும், 2020-இல் அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டது. அந்த சமயம் கோவிட் பெருந்தொற்று பரவிய காரணத்தால், அந்த ஜாமீன் உத்தரவை மின்னஞ்சல் மூலமாக சிறை அதிகாரிகளுக்கு அனுப்பியது குஜராத் உயர் நீதிமன்றம். அப்படி ஒரு மின்னஞ்சல் அனுப்பியதைப் பற்றி சிறை அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த அதிகாரிகளால், அந்த மின்னஞ்சலில் அனுப்பப்பட்டிருந்த ‘அட்டாச்மென்ட்’டை எப்படித் திறப்பது என்று தெரியவில்லை. அதனால், சந்தன்ஜி மேலும் மூன்றாண்டுகள் சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்தது. சமீபத்தில் இந்த விஷயம் உயர் நீதிமன்றத்தின் கவனத்துக்கு வர, ஒரு நாளைக்கு 91 ரூபாய் வீதம், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு இலட்சம் ரூபாயை சந்தன்ஜிக்கு இழப்பீடாக மாநில அரசு தர வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ‘குஜராத் மாடல்’ எல்லாம் பிறகு பார்த்துக்கொள்ளலாம். முதலில் கொஞ்சம் படிங்க குஜ்ஜூஸ்..!

## :.ப்ளாஷ்பேக்



பாண்டியன்-பூங்கொடி

### தலைவர் தந்த தேதி!

எங்களுடைய (ச.பாண்டியன் - பூங்கொடி) திருமணம் 01-09-1986 அன்று தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம் கீழத்திருப்பாலக்குடியில் எனது இல்லத்தில் நடத்தலாம் என்று திட்டமிடப்பட்டது. ஆனால், அந்த சமயம் அருப்புக்கோட்டை இடைத்தேர்தல் நடைபெற உள்ளதால், தன்னால் வர இயலாது எனவும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடத்திக் கொள்ளுமாறும் தலைவர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார். நாங்கள் தலைவர் தரும் தேதியில் திருமணம் வைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்து, அவரிடம் தெரிவித்தோம். அதன்படி புரட்டாசி மாதம் 15-ஆம் நாள், அதாவது 01.10.1986 அன்று தலைவர் கலைஞர் தலைமையில், பெரியவர் மன்னை, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, தஞ்சை மாவட்ட தி.மு.க. செயலாளர் கோ.சி.மணி ஆகியோரின் முன்னிலையில் சுயமரியாதைத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

**-ச.பாண்டியன்- பூங்கொடி,**
**கீழத்திருப்பாலக்குடி, மன்னார்குடி வட்டம்,**
**திருவாரூர் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### பெரியார் விழாவில் பொய்

**1977-ஆம் ஆண்டு, செப்டம்பர் 18-ஆம் தேதி அண்ணா மேம்பாலம் அருகே பெரியார் சிலையைத் திறந்து வைத்தார் எம்.ஜி.ஆர். அப்போது திராவிடர் கழகத்தின் சார்பில் கலந்துகொண்ட அன்னை மணியம்மையார், “அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வேண்டுமென பெரியார் போராடினார். முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அதை நடைமுறைப்படுத்த முயன்றும் முடியவில்லை. இந்த அரசு சட்டத்திருத்தம் மூலம் அதை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்” என உருக்கமாகக் கேட்டார். ஆனால் மேடையில் பேசிய எம்.ஜி.ஆர். “கோயில்களையே வேண்டாம் என்ற பெரியார், அர்ச்சகராவது பற்றி பேசினாரா என்ற சந்தேகம் ஏற்படுகிறது” எனக் குறிப்பிட்டார். “பெரியாரின் சிலையைத் திறந்து வைத்துவிட்டு, பெரியாரைப் பற்றி பேசாமல் இவ்வளவு பெரிய பொய்யைச் சொல்லி இருக்கிறார் எம்.ஜி.ஆர்” என பின்னர் அன்னை மணியம்மையார் அறிக்கை வெளியிட்டார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 255




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 29-09-2023

# மணிப்பூர் மீண்டும் எரிகிறது!

மே - சூன் - சூலை - ஆகஸ்ட் - செப்டம்பர் என ஐந்து மாதமாக எரிந்து கொண்டிருக்கிறது மணிப்பூர் மாநிலம். ஒன்றிய பா.ஜ.க. அரசின் கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடு இது. அந்த மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசின் கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடு இது.

ஒரே ஒரு மாநிலத்தின் பிரச்சினையைக் கூடத் தீர்க்க முடியாமல் - கூச்சமே இல்லாமல் நாடாளுமன்றத்தில் எப்படித்தான் பிரதமரும் - உள்துறை அமைச்சரும் தலைநிமிர்ந்து பேசுகிறார்கள் என்றே தெரியவில்லை? அவர்களுக்கு இது ஒரு பிரச்சினையாகவே தெரியவில்லையா? மணிப்பூரை வேறு நாடு என்று நினைத்துக் கொள்கிறார்களா?

மணிப்பூர் மாநிலத்தை கலவர பூமியாக அறிவித்து அம்மாநில ஆளுநர், நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார். மணிப்பூரில் மே மாதம் முதல் இணைய சேவைகள் துண்டிக்கப்பட்டிருந்தன. செப்டம்பர் 23-ந் தேதிதான் முழுமையாக இணைய சேவை மீண்டும் வழங்கப்பட்டது. தற்போது மாணவர்கள் படுகொலை காரணமாக வன்முறை பரவாமல் இருக்க அடுத்த 5 நாட்களுக்கு மணிப்பூரில் இணைய சேவை துண்டிக்கப்பட்டிருக்கிறது. பள்ளி, கல்லூரிகளை மீண்டும் மூட உத்தரவிட்டுள்ளது மாநில அரசு. அதாவது மே மாதம் முதல் ஐந்து மாதங்களாக எரிகிறது மணிப்பூர். எரிந்து கொண்டே தான் இருக்கிறது.

கடந்த மே மாதம் மணிப்பூரில் கலவரம் ஏற்பட்டபோது நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போய்விட்டனர். அவர்கள் பற்றிய விவரங்கள் சமூக வலைதளங்களில் வெளியிடப்பட்டன. அதன் அடிப்படையில் சி.பி.ஐ. மற்றும் விசாரணைக்குழுவினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். காணாமல் போன மாணவர், மாணவிகளில் ஹிஜம் மற்றும் பிஜம் என்ற இருவரும் முகாம் ஒன்றில் புல்வெளி தரையில் உட்கார வைத்து இருப்பது போன்ற காட்சியும், அவர்களுக்குப் பின்னால் ஆயுதம் ஏந்தி சிலர் நிற்பது போன்ற காட்சியும் வெளியாகியுள்ளது.

அதே வீடியோவில் அடுத்த சில நிமிடங்களில் அந்த 2 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடப்பது போன்ற காட்சிகளும் இடம் பெற்று இருந்தன. இந்த வீடியோ காட்சிகள் சமூகவலைதளங்களில் வைரலாகப் பரவி வருகிறது. இது தொடர்பாக, மணிப்பூர் முதல்வர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், “இணைய சேவை பயன்பாட்டுக்கு வந்த பின்னர் இரண்டு மாணவர்களின் புகைப்படங்கள் வைரலாகிக் கொண்டிருக்கின்றன. இறந்துபோன மாணவர்கள் ஹிஜாம் லின்தோயின்காம்பி (17), பிஜாம் ஹேம்ஜித் (20) என அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த இரண்டு மாணவர்களும் கடந்த ஜூலையில் காணாமல் போனவர்கள். மணிப்பூர் வன்முறை வழக்கு ஏற்கெனவே சி.பி.ஐ. வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மக்கள் விருப்பத்தின் பேரில்தான் வழக்குகள் சி.பி.ஐ. வசம் ஒப்படைக்கப்பட்டன. தற்போது வெளியான புகைப்படம் தொடர்பாக உறுதியான நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படும். இந்த கொடுங் குற்றத்தைச் செய்தவர்களுக்கு நிச்சயமாகக் கடுமையான தண்டனை வழங்கப்படும். அந்தப் புகைப்படத்தைப் பார்க்கும்போது அந்த இரண்டு மாணவர்களும் ஏதோ ஓர் ஆயுதக் குழுவின் வனப்பகுதி கூடாரத்தில் இருப்பது புலப்படுகிறது. அந்த மாணவர்கள் படுகொலையின் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பது குறித்து மத்திய பாதுகாப்பு அமைப்புகளுடன் மணிப்பூர் காவல்துறையினரும் இணைந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்” என விளக்கம் அளிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்தி துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் மணிப்பூர் மாநில அரசு சொன்னதை மக்கள் நம்பத் தயாராக இல்லை.

இதனைத் தொடர்ந்து, மாநிலம் முழுவதும் மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். தலைநகர் இம்பாலில் முதல்வர் பிரேன்சிங்கின் அலுவலகம் நோக்கி பேரணியாகச் செல்ல முயன்ற மாணவர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் பலரும் காயமடைந்தனர். கண்ணீர் புகைக்குண்டுகள் வீசப்பட்டன. இந்தப் போராட்டம் இன்னமும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

இந்நிலையில், மணிப்பூர் மாநிலத்தை கலவர பூமியாக அறிவித்து அம்மாநில ஆளுநர் அனுசுயா உய்கி உத்தரவிட்டுள்ளார். இதற்காக ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்படுவதாகவும் அவர் அறிவித்துள்ளார். 19 மாவட்டங்கள் தவிர பிற பகுதிகள் அனைத்தும் பதற்றத்துக்குரிய பகுதியாகத் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் 1 முதல் அடுத்த 6 மாதங்களுக்கு இந்தச் சட்டம் அமலில் இருக்கும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

இதைத் தவிர அந்த மாநில அரசால் எதுவும் செய்ய முடியவில்லை. ஒன்றிய அரசாலும் எதுவும் செய்ய முடியவில்லை.

இவ்வளவு நடந்த பிறகும் அந்த மாநிலத்தின் முதலமைச்சரை மாற்றக் கூட பா.ஜ.க. தலைமையால் முடியவில்லை. அந்த நடவடிக்கையைக் கூட எடுக்கவில்லை. முதலமைச்சர் பிரேன் சிங் மீதான நம்பிக்கையின்மைதான் இந்தக் கலவரங்களுக்குக் காரணம். அவரை நீக்குவதன் மூலமாக போராட்டக் காரர்களை அமைதிப்படுத்தலாம். அதனைக் கூட பா.ஜ.க. தலைமையால் செய்ய முடியவில்லை.

**பிரதமர் நரேந்திர மோடி, இது வரை மணிப்பூர் பக்கமே போகவில்லை. செப்டம்பர் முதல் வாரத்தில் கலவரம் கொஞ்சம் அடங்கியது போலத் தெரிந்தது. அப்போதாவது பிரதமர் மோடி போய் மக்களைச் சந்தித்திருக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் தனியாக விவாதம் கூட நடத்தத் தயாராக இல்லை. மற்ற பிரச்சினைகளைப் பற்றி எல்லாம் பேசி விட்டு - ஒப்புக்கு கடைசியாக ஐந்து நிமிடம் பேசினார் பிரதமர். உள்துறை அமைச்சர் அமித்ஷா, அவருக்குத் தொடர்பு இல்லாத அரசியல் பிரச்சினைகளுக்கு எல்லாம் விளக்கம் அளிப்பார். ஆனால் அவர் பொறுப்பேற்க வேண்டிய மணிப்பூர் கலவரங்களை மட்டும் மறந்துவிடுவார்.**

**மணிப்பூரில் நடப்பது இனவாதப் படுகொலைகள். மாநில பா.ஜ.க. அரசும் ஒன்றிய பா.ஜ.க. அரசும் - கைகட்டி வேடிக்கை பார்க்கவே நடக்கிறது. இவர்கள் வேடிக்கை மட்டுமே பார்ப்பார்கள் என்பதால் நடக்கிறது.**

## டெல்லியில் இருந்து ஒரு போன் வந்தால் போதும்

# அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி பிரச்சினைகள் எல்லாம் முடிந்து விடும்!

## பெத்தநாயக்கன்பாளையத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

சேலம், செப். 29-

பெத்தநாயக்கன்பாளையத்தில் வருகின்ற டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி நடைபெற உள்ள கழக மாநில இளைஞர் அணி இரண்டாவது மாநாட்டிற்கான முன்னேற்பாட்டு பணிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர், கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களிடம் அனுமதி பெற்று கழக இளைஞரணியின் 2வது மாநில மாநாட்டினை வரும் டிசம்பர் 17ம் தேதி சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் நடத்த உள்ளோம். இதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் கே.என்.நேரு, மாவட்டச் செயலாளர்கள் சிவலிங்கம், ராஜேந்திரன், செல்வகணபதி உள்ளிட்ட மூத்த நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் கிட்டத்தட்ட 3 லட்சம் பேர் அமர்ந்து பார்க்கும் வகையில் மாநாட்டிற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறோம். சமையல் பணி உள்ளிட்ட அடிப்படை பணிகளும் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இளைஞர் அணி மாநாட்டிற்காக செயல்வீரர்கள் கூட்டத்தினை நடத்தி வருகிறோம். ஒவ்வொரு இடத்திலும் ஏராளமான இளைஞர்கள் மிகுந்த ஆர்வத்து டன் கலந்து கொண்டு வருகின்றனர். அந்த வகையில் சேலம் மாநாட்டினை மிகப் பெரிய வெற்றி மாநாடாக இளைஞர் அணியினர் மாற்றிக் காட்டுவார்கள். அதற்கான ஏற்பாட்டினை தி.மு.க. நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

இப்படி ஒரு மாநாடு இந்தியாவில் இதுவரை நடந்தது இல்லை என்ற நிலையை உருவாக்குவோம். மாநாட்டில் திராவிட இயக்கத்தின் கொள்கைகள், தி.மு.க. வரலாறு, பெரிய தலைவர்களின் வாழ்க்கை வரலாறு அரசின் சாதனைகள், புகைப்படக் கண்காட்சி அமைக்கப்படும்.

அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணிப் பிரிவு என்பது உட்கட்சி தகராறுதான். ஆரம்பத்தில் இருந்தே அதை காமெடியாகத்தான் பார்க்கிறேன். மறுபடியும் பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா கூப்பிட்டு பேசினால் மீண்டும் கூட்டணி வந்து விடும். அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் நான்கு பேர் டெல்லிக்கு எப்படி போனார்கள் எனத் தெரியுமா? யாருக்கும் தெரியாமல் குறுக்கு வழியில் சென்றனர்.

இங்கிருந்து கொச்சிக்கு போய், பெங்களூரு போய் டெல்லி சென்றனர்.

நேற்று கூட மூத்த தலைவர்கள் யாரும் பா.ஜ.க. பற்றி கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தக் கூடாது என அறிவுறுத்தியதாக கேள்விப்பட்டேன். இதிலிருந்து என்ன தெரிகிறது என்பதை மக்கள் தெரிந்து கொள்வார்கள். மக்கள் மீண்டும் ஏமாற மாட்டார்கள். இருதரப்பினரிடையே மோதல் முதல் தடவை அல்ல. மீண்டும் சேர்ந்து விடுவார்கள். ஒரு போன் வந்தால் எல்லாம் முடிந்து விடும். அவர்கள் இணைந்து இருந்தாலும் சேர்ந்து இருந்தாலும் தி.மு.க. அதைப் பற்றி கவலைப்படுவதில்லை. எங்களுடைய நோக்கம் மக்கள் சேவையாற்றுவதுதான்.

தி.மு.க. கூட்டணி கடந்த 7 வருடங்களாக இருக்கிறது. இது கொள்கை கூட்டணி என்பதால் தொடர்ந்து நீடிக்கிறது. அதை மிகுந்த சாமர்த்தியமாக முதலமைச்சர் ஸ்டாலின் கொண்டு செல்கிறார். மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். யார் மக்கள் பணியாற்றுகிறார்கள், யார் ஏமாற்றுகிறார்கள் என்று. மக்களே முடிவு செய்வார்கள் யார் வர வேண்டும் என்று.

சி.ஏ.ஜி. அறிக்கையில் ரூ.7.5 லட்சம் கோடி என்ன ஆனது என்று தெரியவில்லை என குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஒரு கிலோமீட்டர் சாலை அமைக்க ரூ.250 கோடி செலவு செய்திருக்கிறார்கள். ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில், ஏற்கனவே இறந்து போன 88 ஆயிரம் பேருக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. 9 ஆண்டுகால பா.ஜ.க. அரசின் ஊழல் தொடர்ந்து வெளியே வந்து கொண்டிருக்கிறது. இதனை தடுக்கும் விதத்தில் பாரதிய ஜனதாக் கட்சி மற்றவர்களை பற்றி பொய் பிரசாரம் செய்து வருகிறது.

அடுத்த முறை பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சி அமைக்காது. இதற்கு ஒட்டுமொத்த இந்திய மக்களும் துணை நிற்பார்கள் என்றார்

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் பெண்களிடையே மிகப்பெரிய புத்துணர்வை ஏற்படுத்தி இருக்கிறது. செல்லும் இடமெல்லாம் தேடி வந்து நன்றி சொல்கிறார்கள். 99 சதவீதம் நன்றாக இருக்கிறது. ஒரு சதவீதம் சில இடங்களில் குறையும் சொல்கிறார்கள். விண்ணப்பத்திற்கு பதில் வரவில்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பினை முதலமைச்சர் தந்துள்ளார். விண்ணப்பித்த 80 சதவீதம் பேருக்கு பணம் வழங்கப்பட்டுள்ளது. எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

காவிரி பிரச்சினையில் எப்போதும் உரிமைகளை விட்டுத் தரமாட்டோம். கண்டிப்பாக காவிரி நீரைப் பெறுவோம். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு உணர்வு கொள்கை இருக்கும். நம்முடையதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என சொல்ல முடியாது. அ.தி.மு.க. ஆட்சியில் மாநில உரிமைகள் அனைத்தும் விட்டுக் கொடுக்கப்பட்டது. அதைப் போல தி.மு.க. எந்தக் காலத்திலும் மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்காது. முதலமைச்சரின் புகைப்படத்தை வைத்து அநாகரீகமான முறையில் கர்நாடக மாநிலத்தில் நடைபெற்ற போராட்டம் கண்டிக்கத்தக்கது என்றார் பேட்டியின் போது நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு, மாவட்ட செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம், ஆர்.ராஜேந்திரன் எம்.எல்.ஏ, டி.எம்.செல்வகணபதி, எம்.பிக்.கள் எஸ்.ஆர்.பார்த்திபன், டாக்டர் பொன்.கௌதம சிகாமணி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் திரளாக கலந்து கொண்டனர்.

### காலநிலை மாற்றம் காரணமாக


## அமேசான் காடுகளில் வறட்சி அபாயம்!

*ரியோ டி ஜெனிரோ, செப்.29-*

*காலநிலை மாற்றம் காரணமாக அமேசான் காடுகளில் வறட்சி ஏற்படும் அபாயம் நிலவுகிறது. உலகின் நுரையீரலாக அமேசான் காடுகள் செயல்படுகின்றன. ஜனத்தொகை வெளியிடும் கரியமில வாயுக்கள் உள்ளிட்ட நச்சுகளை சுத்திகரித்து ஆக்சிஜன் என்னும் உயிர்காற்றை உற்பத்தி செய்து பெரும் பங்காற்றி வருகிறது. அமேசான் மலைக்காடுகளின் 60 சதவீதப்பகுதி தென் அமெரிக்கா நாடான பிரேசிலில் உள்ளது.*

*இந்தநிலையில் காலநிலை மாற்றம் காரணமாக அமேசானில் கடந்த 2019ம் ஆண்டு முதல் காட்டுத்தீ பரவியது. கட்டுங்கடங்காத காட்டுத்தீ காரணமாக காடுகள் பலத்த சேதத்திற்கு உள்ளாகின. மேலும் அவ்வப்போது பெய்யும் மழையும் பொய்த்துபோனது. அங்கு உள்ள அணைகள் உள்ளிட்ட நீர்தேக்க நிலையங்களின் கொள்ளளவு குறைந்து வருகிறது. எனவே வரும் காலங்களில் அங்கு வறட்சி ஏற்படும் அபாயம் நிலவுகிறது.*

*பூர்வ பழங்குடிகள் உள்பட 5 லட்சத்திற்கும் அதிகமான பிரேசில் மக்கள் வறட்சியினால் பாதிக்கப்படுவர் என பிரேசில் நாட்டின் வானிலை ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதனையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுமார் 166 கோடி ரூபாய் முதற்கட்டமாக ஒதுக்கப்பட்டு நீர்நிலைகளை பாதுகாக்க உத்தரவிடப்பட்டுள்ளது.*



# ‘ஒரு மானமில்லை, அதில் ஈனமில்லை’

(எடப்பாடி பழனிச்சாமி வீட்டின் உள்ளே அமர்ந்திருக்கிறார்! வெளியே இரண்டு மூன்று கார்கள் சர்… சர்… என வந்து நிற்கின்றன.)

**எடப்பாடி** : (உதவியாளரிடம்) என்னப்பா… வெளியே சத்தம், யாருன்னு பாரு…

**உதவியாளர்**: யாருன்னு தெரியல்ல… இரண்டு மூணு காரு வந்து நிற்குது…

**எடப்பாடி** : சரியா பாருய்யா.. அமலாக்கத் துறையா?… வருமான வரித்துறையான்னு? (உதவியாளர் ஜன்னல் வழியாகப் பார்க்கிறார்)

**எடப்பாடி** : யாருய்யா… சீக்கிரம் சொல்லித் தொலையய்யா!

**உதவியாளர்** : இப்போதான் இறங்கப் போகிறார்கள்… கார் கதவு திறக்கிறது.

**எடப்பாடி** : என்ன எழவுய்யா… சீக்கிரம் சொல்லு! கார்களுக்குப் பின்னாடி ஏதாவது மத்திய, மாநில போலீஸ் வந்து இறங்குறாங்களா?

**உதவியாளர்** : அப்படி எல்லாம் எதுவும் தெரியலேய்யா…

**எடப்பாடி** : யாருய்யா… வர்றாங்க…

**உதவியாளர்** : யாருமில்லேய்யா… பயப்பட ஒண்ணுமில்லை… நம்ப கட்சிக்காரங்கத்தான் சில பேர் வர்றாங்க…

**எடப்பாடி** : அப்பாடா… வேறு யாருமில்லையே… இப்பதான்பா எனக்கு மூச்சே வருது… நம்ப கட்சிக்காரன்களுக்கு காலம் நேரமே கிடையாதா?… எதுக்கு இப்ப வர்றாங்களாம்.

**உதவியாளர்** : தெரியலியே… அய்யா! வந்தா அவங்கக்கிட்டே என்ன சொல்றது!

**எடப்பாடி** : உட்காரச் சொல்லு… இல்லேன்னா அவங்க முடுக்கிக்கிட்டு மிரட்டுவாங்க… ‘இந்த மடம் இல்லேன்னா சந்தை மடம்ன்னு’ சொல்வாங்களே, அதைப்போல ஓ.பி.எஸ். பக்கம் கிளம்பிடுவாங்க…

(உதவியாளர், வந்த தோழர்களை வரவேற்று உட்கார வைக்கிறார்! வந்தவர்களில் ஒருவர் உதவியாளரைப் பார்க்கிறார்… உதவியாளர் தனது முகத்தில் படிந்திருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டிருக்கிறார்!)

**வந்தவர்** : என்ன ஏன் இப்படி வியர்த்து நிற்கிறீர்கள்…

**உதவியாளர்** : (சமாளித்தவாறு) ஒண்ணுமில்லே. ஒண்ணுமில்லே… எதை எதையோ நினைக்கும் போது நம்மை அறியாம வியர்த்து விடுகிறது.

**வந்தவர்கள்**: பொதுச் செயலாளர் புரட்சித் தமிழர் இருக்கிறாரா?


**உதவியாளர்** : புரட்சித் தமிழரா?…. நீங்க சத்யராஜை தேடி வந்தீர்களா?

**வந்தவர்** : யோவ்… நீர் எடப்பாடியின் உதவியாளர்தானே…

**உதவியாளர்** : ஆம்… ஆம்… அதில் என்ன சந்தேகம்?

**வந்தவர்** : நம்ம எடப்பாடியாருக்கு புரட்சித்தமிழர் என்ற பட்டத்தை

## ( கற்பனை உரையாடல் )



சமீபத்தில் மதுரை மாநாட்டில் கொடுத்தது தெரியாதா?

**உதவியாளர்** : ஓ… மறந்துவிட்டேன். மன்னிச்சுக்குங்க… இருக்கிறார்… இதோ போய் சொல்கிறேன்… (உதவியாளர் மனதிற்குள்… புரட்சித் தமிழராம்… அய்யா பயந்துபோய் மிரண்டு கிடக்கிறார்; புரட்சித் தமிழர் என்பதற்கு பதில் மிரட்சித் தலைவர் என்று பட்டம் தந்திருந்தால் மிகமிகப் பொருத்தமாக இருந்திருக்கும்! என முணுமுணுத்தவாறு எடப்பாடியிடம் செல்கிறார்!)

**எடப்பாடி** : என்னய்யா… முணுமுணுத்தபடி வர்றே…

**உதவியாளர்** : ஒண்ணுமில்லே அய்யா… அவங்க ஏதோ அவசரமா உங்களைப் பார்க்க வந்திருக்காங்களாம்!



**எடப்பாடி** : சரி… சரி… (என்றவாறு வந்தவர்களைப் பார்க்கப் புறப்படுகிறார்) (பார்க்க வந்தவர்கள் இருக்கும் இடத்துக்கு எடப்பாடி செல்ல, “புரட்சித் தமிழர்… வாழ்க!” “அடிமைச் சங்கிலியை அறுத்தெறிந்த அடலேறு வாழ்க!” “பா.ஜ.க.வின் கொட்டம் அடக்கப் புயலாய் புறப்பட்ட புரட்சித் தமிழர் பழனிச்சாமி வாழ்க!” “அண்ணாமலைக் கூட்டத்தின் கொட்டத்தை அடக்கிய ஆட்டம் பாம் அண்ணன் ஈ.பி.எஸ்… வாழ்க…” என்றெல்லாம் முழக்கமிட்டவாறு எடப்பாடி பழனிச்சாமியை தொண்டர்கள் வாழ்த்துகின்றனர்.)

**எடப்பாடி** : நன்றி… நன்றி… எல்லாரும் உட்காருங்க…

**தொண்டர்கள்** : நல்ல முடிவு எடுத்தீங்க தலைவரே! பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லேன்னு சொன்னதிலிருந்து நம்ப தொண்டர்களுக்கு புது முறுக்கு வந்திடுச்சு… பட்டாசு வெடிச்சு, இனிப்பு வழங்கி எல்லா இடங்களிலும் கொண்டாட்டம்தான்! இந்த முடிவிலிருந்து யார் எதைச் சொன்னாலும் மாறிடாதீங்க…

**எடப்பாடி** : சரி… சரி… இன்றிலிருந்து பா.ஜ.க.வின் சர்வாதிகார ஆட்சியை, மதவெறியை அம்பலப்படுத்துவோம். பா.ஜ.க. இல்லாத அணியை அமைத்துப் போரிடுவோம்! அண்ணாமலை போன்ற அரைக்கால் வேக்காட்டு அரசியல்வாதிகளின் கொட்டம் அடக்குவோம்!

**தொண்டர்கள்** : புரட்சித் தமிழன் வாழ்க! (எனக் கோஷமிட்டுக் கொண்டிருக்கின்றனர், அப்போது எடப்பாடியின் உதவியாளர் வருகிறார்.)

**உதவியாளர்** : அய்யா… ஒரு நிமிடம்.

**எடப்பாடி** : என்னய்யா…?

**உதவியாளர்** : கொஞ்சம் உள்ளே வர்றீங்களா… தனியாப் பேசணும்!

**எடப்பாடி** : (உள்ளே சென்று உதவியாளரிடம்) என்னத்த தனியாப் பேசணும்!

**உதவியாளர்** : டெல்லியிலிருந்து போன் வந்துச்சுய்யா… உள்துறை அமைச்சர் உங்களிடம் பேசணுமாம்!

**எடப்பாடி:** என்னய்யா? திடீர்ன்னு இடியை இறக்குறே.. நாம் பேசக் கேட்ட போதெல்லாம் நேரம் ஒதுக்காதவர் இப்ப என்ன பேசப்போறாராம்!

**உதவியாளர்** : தெரியலே அய்யா… நம்பர் கொடுத்திருக்காங்க… அழைக்கட்டுமா?

**எடப்பாடி:** அழைச்சுத் தொலை…

(உதவியாளர் தனது அலைபேசியிலிருந்து அழைக்கிறார்… அலைபேசியை எடப்பாடியிடம் கொடுக்க…)

**எடப்பாடி:** நமஸ்தே ஜி… என்கிறார். (அங்கிருந்து என்ன பேசப்படுகிறது என்பது தெரியவில்லை.. எடப்பாடியின் முகம் வியர்க்கிறது. வியர்வைத் துளிகள் முகமெல்லாம் படர்கின்றன.)

**(எடப்பாடி, ‘ஓ.கே…ஜி….’ ‘அப்படியே ஆகட்டும் ஜி’ ‘இதெல்லாம் ஒரு நாடகம் ஜி’ எங்க கட்சிக்காரங்களை திருப்திப் படுத்தவே சும்மா எடுத்த முடிவு ஜி… அய்யய்யோ… கோபப்படாதீங்க ஜி… முனுசாமி பேட்டி கொடுத்ததைச் சொல்றீங்களா? அந்த ஆளு அப்படித்தான், கொஞ்சம் முந்திரிக்கொட்டைத் தனமா செஞ்சிருவாரு. நான் அவரைக் கண்டிக்கிறேன். இல்லை ஜி, இல்லை ஜி… நான் நமது கூட்டைப் பற்றி இதுவரை எங்கேயும் வாயையே திறக்கலை. நம்ப கூட்டணி ஒரு நாளும் முறியாது ஜி… ‘நீங்க காலால் இட்ட கட்டளையை தலையால் நிறைவேற்றக் காத்திருக்கிறோம். ஜி’ - ஓ… நீங்க எங்க மாவட்டச் செயலாளர் கூட்டத்தில் எடுத்த முடிவு பற்றி கேட்கிறீங்களா?… அதெல்லாம் உங்க பாஷையிலே சொல்லணும்னா ஜூம்லா… அதாவது சும்மானாச்சுக்கும்… எதையும் சீரியசாக எடுத்துக்காதீங்க… அப்படியா?.. உடனே அறிவிச்சுடுறேன்…**


– என்றெல்லாம் எடப்பாடி பேசுவது கேட்கிறது! வெளிரிய முகத்துடன் எடப்பாடி காணப்படுகிறார்! முகத்தை துண்டால் துடைத்துக் கொண்டவாறு காத்திருக்கும் தொண்டர்களிடம் வருகிறார்!)

**தொண்டர்கள்** : தலைவரே; வருகிறோம் தலைமை கிரீன் சிக்னல் கொடுத்துவிட்டது. இனி அந்த மதவெறி பி.ஜே.பி. கூட்டத்தைப் பிய்த்து - அக்கு வேறு ஆணி வேறாக ஆக்கி விடுகிறோம் (எனப் புறப்பட…)

**எடப்பாடி:** அவசரப்படாதீர்கள்…

**தொண்டர்கள்** : என்ன சொல்கிறீர்கள்?

**எடப்பாடி:** பாரதிய ஜனதா குறித்தோ, அக்கட்சித் தலைவர்கள் குறித்தோ யாரும் எதுவும் இனி பேசக் கூடாது!



சிலந்தி

**தொண்டர்கள்:** அவர்கள் குட்டுவார்கள்; நாம் குனிய வேண்டுமா? பின்னர் எதுக்காக மாவட்டச் செயலாளர்கள், கட்சியின் முக்கியத் தலைவர்கள் கூடி, இனி பாரதிய ஜனதாவுடன் ஒட்டுமில்லை; உறவுமில்லை என்று கூறினீர்கள்!

**எடப்பாடி:** அது அரசியல் சாணக்யம்!

**தொண்டர்:** அது சாணக்யம் இல்லை; உங்களை நம்பி நின்ற இலட்சக்கணக்கான தொண்டர்களின் சுயமரியாதையை, தன்மான உணர்வை தகர்த்தெறிந்த தற்குறித்தனம்; தான்தோன்றித்தனம் - [எனக்கூறி வெளியேறுகின்றனர்].

(எடப்பாடி வீட்டின் தொலைக்காட்சியில் பாடல் ஒலித்துக் கொண்டிருக்கிறது.)

**‘சிலர் ஆசைக்கும் தேவைக்கும்**
**வாழ்வுக்கும் வசதிக்கும்**
**ஊரார் கால் பிடிப்பார்**
**ஒரு மானமில்லை, அதில் ஈனமில்லை**
**அவர் எப்போதும் வால்பிடிப்பார்’**

(எடப்பாடி வீட்டுக்குள் போய், “நேரம் காலம் தெரியாமல், டி.வி.யில் ஏதேதோ பாட்டு பாடுது. **முதல்ல, டி.வி.யை ஆஃப் பண்ணுய்யா” என்று கூறியவாறு, ஏ.சி.யை, ஃபேனை வேகமாக போட்டு விட்டு அமர்கிறார்.)**



மதுரை தெற்கு மாவட்டம் தே.கல்லுப்பட்டி அருகிலுள்ள முத்தப்பன்பட்டியில் அமைந்துள்ள முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையா அவர்களின் நினைவிடத்தில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்திய போது எடுத்தபடம். உடன் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், கழக நிர்வாகிகள் ஏர்போர்ட் பாண்டியன், கொ.தனபாண்டியன், ராமமூர்த்தி, பாண்டி, நாகராஜன், மதன்குமார், முத்துராமன், ஜெயச்சந்திரன், சங்கரபாண்டி, ஸ்ரீதர், பி.எஸ்.என்.எல். செல்வம், ரம்யாமுத்துக்குமார், ஆதவன் அதியமான், செல்வேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



அரசுமுறைப் பயணமாக எகிப்து தலைநகர் கெய்ரோ சென்றுள்ள தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் நேற்று முன்தினம் (27.9.2023) அந்நாட்டின் செனட் துணை சபாநாயகர் பாஹா எல்டின் ஸுக்கா (Bahaa ElDin shukka) அவர்களின் தலைமையில் நடைபெற்ற செனட் சபையின் கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில், அந்நாட்டின் செனட் செகரட்டரி ஜெனரல் முகம்மது இஸ்மாயில் இட்மேன் (Mahmoud Ismail Etman), இந்திய தூதர் அஜித் குப்தா, அசாம் சட்டப் பேரவைத் தலைவர் பிஸ்வாஜித் டைமாரி ஆகியோர் உள்ளனர்.

# தி.மு.க. கூட்டணியில்தான் இருக்கிறோம்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பேட்டி!

சென்னை, செப். 29 -

தி.மு.கழக கூட்டணியில் தான் இருக்கிறோம் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் நேற்று பேட்டியளித்தார்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, அண்ணா அறிவாலயம் சென்று தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து பேசினார். சுமார் 20 நிமிட நேர சந்திப்புக்குப் பிறகு வைகோ நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்

கேள்வி : - தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க. தொடருகிறதா?

பதில்: தி.மு.க. கூட்டணியில்தான் இருக்கிறோம்.

கேள்வி : - அ.தி.மு.க. பா.ஜனதா கூட்டணி முறிவுக்கு பிறகு தி.மு.க. கூட்டணியில் சிறு சலசலப்பு ஏற்பட்டு உள்ளதாக தெரிகிறதே?

பதில்: இங்கு எந்த சலசலப்பும் ஏற்படவில்லை. அமைதியாக எந்த சலசலப்பும் இல்லாமல், நீரோடை போகிற மாதிரி செல்கிறது.

கேள்வி : - அ.தி.மு.க.



பா.ஜனதா கூட்டணி முறிவு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: அவர்கள் உண்மையிலேயே பிரிந்துவிட்டார்களா? அல்லது நாடகமா? என்பது காலப்போக்கில் தான் தெரியும்.

கேள்வி : - வர இருக்கிற நாடாளுமன்றத் தேர்தலில் துரை வைகோ போட்டியிட வாய்ப்புள்ளதா?

பதில்: அதுபற்றி நாங்கள் இன்னும் பேசவே இல்லை.

கேள்வி : - தொகுதி மறுவரையறை செய்யும்போது தமிழ் நாட்டின் எம்.பி. தொகுதி எண்ணிக்கை குறைய வாய்ப்பு உள்ளதா?

பதில்: மிகப்பெரிய அளவில் தமிழ்நாட்டுக்கு பாதிப்பு ஏற்படும். நமக்கு 8 எம்.பி. குறையலாம். ம.பி., உ.பி. மாநிலங்களில் அதிகமாகக் கூடும். அப்படி வரும்போது, இந்தியாவின் மொத்த வரைபடத்தில் நம்முடைய எண்ணிக்கை குறையும்போது, அதனுடைய விளைவுகள் இந்திய ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் விரோதமாக இருக்கும்.

இந்தியா என்கிற ஒரு அமைப்பு, ஒரு நாடு, இன்றைக்கு இருக்கக்கூடிய நினைப்பு போய்விடும். அதனுடைய விளைவுகள் எல்லா மாநிலங்களிலும் எதிர்விளைவுகள் ஏற்படும். மிகப்பெரிய சோதனையில் போய் முடியும்.

கேள்வி : - காவிரி பிரச்சினையில் கர்நாடகாவில் காங்கிரஸ் உள்பட எல்லாருமே ஒன்று சேர்ந்து தண்ணீர் திறந்துவிட எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறார்களே?

பதில்: உச்சநீதி மன்றமும் தண்ணீர் கொடுக்க தீர்ப்பு சொல்லிவிட்டது. ஒழுங்காற்று குழுவும் சொல்லிவிட்டது. அவர்களுக்கு வேறு வழியில்லை. அதனால் சாலையில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி : - முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் படத்தை அங்கு அவமரியாதை செய்கிறார்களே?

பதில்: நாம் அமைதியாக இருக்கிறோம். நம் பக்கம் நியாயம் இருக்கிறது. நம் பக்கம் உச்சநீதி மன்றம் உள்ளது. அதனால் அமைதியாக இருக்கிறோம்.

கேள்வி : - 'இந்தியா' கூட்டணியில் இருக்கக்கூடிய கட்சிகள் தமிழ்நாட்டில் தொடருதா?

பதில்: ஆமாம். கூட்டணியில் தொடருகிறோம்.

கேள்வி : - திருமாவளவன் உள்ளிட்ட அனைவரும் ஒற்றுமையாக கூட்டணியில் இருக்கிறார்களா?

பதில்: எல்லோரும் ஒற்றுமையாக இருக்கிறார்கள்.

கேள்வி : - திருமாவளவனுக்கு அ.தி.மு.க. தரப்பில் தூது விடுவதாக சொல்கிறார்களே?

பதில்: அதுமாதிரி இல்லை. தமிழ்நாட்டைப் பொருத்தவரை இந்தக் கூட்டணியில் எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது.

இவ்வாறு வைகோ கூறினார்.

### அரசு மருத்துவமனையின் உன்னதச் சேவையை

# அரசியல் லாபத்துக்காகப் பயன்படுத்துவதா?

## எடப்பாடி பழனிச்சாமி - விஜயபாஸ்கருக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் காட்டமான பதில்!

சென்னை, செப். 29 -

"அரசு மருத்துவமனையில் உன்னத சேவையை அரசியல் லாபத்துக்காகப் பயன்படுத்துவதா?" என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் எடப்பாடி பழனிச்சாமி, விஜயபாஸ்கர் ஆகியோருக்கு காட்டமான பதிலளித்துள்ளார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (27.09.2023), சென்னை, இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் திருமதி.ஜோதி என்பவரை நேரில் சந்தித்து அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

15/09/2023 அன்று, திருமதி ஜோதி என்ற 32 வயது பெண், தனியார் மருத்துவமனையில் இருந்து, மாரடைப்பு நோய் கண்டறியப்பட்டு, மேல் சிகிச்சைக்காக இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இருதய நோய்ப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு இரண்டு நாட்கள் தக்க மருந்துகள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் coronary angiography பரிசோதனை செய்யப்பட்டது.

பரிசோதனைக்குப் பின்னர் அவரது கையில் வீக்கம் ஏற்பட்டது. பரிசோதனையில் அவருக்கு இரத்த நாள அடைப்பு ஏற்பட்டது என கண்டறியப்பபட்டது. பின்னர் அவரது கால்களிலும் இரத்த நாள அடைப்பு ஏற்பட்டது. Systemic arterial thrombosis என்ற இரத்த நாளங்கள் அடைப்பு நோயினால் பல நாளங்களில் அடைப்பு (இரத்த உறைவு) ஏற்பட்டது என தெரிய வந்தது.

சர்க்கரை நோய், இரத்த அழுத்த நோய் போன்ற காரணிகள் இல்லாத நிலையில் நடுவயதுப் பெண்ணான இந்த நோயாளிக்கு மாரடைப்பு ஏற்பட்டது கூட, அடிப்படையில், இரத்தம் உறைதல் தன்மை கொண்ட நோயினால் தான் ஏற்பட்டுள்ளது.

மேலும், வலது கை இரத்த உறைவினால் செயலிழந்து விட்டதால், முழங்கைக்கு மேல் வரை அகற்ற வேண்டிய சூழ்நிலை உள்ளது. உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தவரை சிகிச்சை அளித்து காப்பாற்றி உள்ளோம். சிகிச்சையில் தவறு நடந்திருந்தால் நிரூபிக்கலாம், முழு ஒத்துழைப்பு அளிக்க தயாராக உள்ளோம்.

இந்நிலையில் எடப்பாடி பழனிச்சாமி, விஜயபாஸ்கர் எந்த உயரிய மருத்துவர்கள் வேண்டுமானாலும் அழைத்து வந்து அளிக்கப்பட்ட சிகிச்சை பற்றி ஆராய்ந்து தெரிந்து கொள்ளலாம், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக ஏழை, எளிய மக்கள் பயன்படுத்தும் அரசு மருத்துவமனையின் உன்னத சேவையை அரசியல் லாபத்துக்காக பயன்படுத்த வேண்டாம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

### திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், சட்டமன்றத் தொகுதியளவில்

# கலைஞர் நூற்றாண்டு விழா மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி!

## சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் தொடங்கி வைத்தனர்!

திருவண்ணாமலை, செப். 29 -

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பொறியியல் மாணவர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் பேச்சுப்போட்டி நடைபெற்றது. கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற பேச்சுப் போட்டியினை சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் தொடங்கி வைத்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்றும், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு வழிகாட்டுதலின்படி, திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பொறியியல் மாணவர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் பேச்சுப்போட்டி நடைபெறும் என்று மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி அறிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து...

27.09.2023 புதன்கிழமை காலை 10.00மணிக்கு, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள புதுப்பாளையம் ஒன்றியம், காரப்பட்டுநாகப்பாடியில் உள்ள அரசு தொழில்நுட்பக் கல்லூரியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், மாணவர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் பேச்சுப் போட்டி நடைபெற்றது.

பேச்சுப்போட்டிக்கு பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் சி.ராம்காந்த் தலைமை வகித்தார்.

மாவட்ட துணை அமைப்பாளர்கள் மு.தினேஷ்பாபு, மா.ரகுபதி, எஸ்.பிரகாஷ், பா.வினோத்குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட தலைவர் அ.மோகன்ராஜ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பேச்சுப்போட்டியில் கலந்துகொண்டு தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினருமான பெ.சு.தி.சரவணன் பேச்சுப்போட்டியினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். கலந்து கொண்ட மாணவர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

★ தொழில்நுட்ப கல்விக்குத் தோள்கொடுத்த கலைஞர்', தொழில் துறையை உயர்த்திய தமிழினத் தலைவர்', திராவிட மாடலும் திறன்மிக்கக் கல்வியும், தெற்குச்சூரியன்', கலைஞரும் தமிழும்'" ஆகிய ஐந்து தலைப்புகளில் பேச்சுப்போட்டிகள் நடைபெற்றது.

பேச்சுப்போட்டியில் ஒன்றியக்குழு தலைவர் சி.சுந்தரபாண்டியன், கல்லூரி முதல்வர் ஆர்.சுரேஷ், முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவர் கா.சு.இளங்கோவன், பேரூராட்சி துணைத் தலைவர் சீனுவாசன், ஊராட்சி மன்றத் தலைவர் கே.சுந்தரம் மற்றும் கல்லூரி தலைவர், முதல்வர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

பேச்சுப்போட்டியில் இளங்கலை, முதுகலை பயிலும் பொறியியல் மாணவர்கள், தொழில்நுட்பகல்லூரி மாணவர்கள், தொழிற்பயிற்சி மைய மாணவர்கள் நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர். பேச்சுப் போட்டியின் நடுவர்களாக பேச்சருவி கு.சபரி, பேராசிரியர் சு.பிரேம்குமார், பேராசிரியர் இலட்சுமி ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியினை மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் மங்கலம்பிரபாகரன் தொகுத்து வழங்கினார்.

பேச்சுப்போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சிறப்பு பரிசுகளும், சிற்றூண்டி மற்றும் மதிய உணவும்ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

சட்டமன்ற அளவில் முதல் பரிசு ரூ.10,000/மும், இரண்டாவது பரிசு ரூ.5,000/மும்மூன்றாவது பரிசு ரூ.3,000/மும் வழங்கப்படவுள்ளது. சட்டமன்றத் தொகுதியளவில் வெற்றிபெறும் போட்டியாளர்கள், மண்டல அளவிலான போட்டிகளுக்கும், மண்டல அளவில் வெற்றி பெறும் போட்டியாளர்கள் மாநில

அளவிலான போட்டிகளுக்கும் தகுதியுடையவர்கள் ஆவார்கள். இறுதிச் சுற்றில் வெல்பவர் ரூ.5 இலட்சம் பரிசும், சுழற் கோப்பையும் பெறுவார்.

நிறைவாக மாவட்ட துணை அமைப்பாளர் து.மணியரசு நன்றி கூறினார்.



மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், கழக மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இன்பாரகு ஆகியோர் இல்லங்கள் தோறும் சென்று திண்ணையில் அமர்ந்து கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உறுப்பினர்கள் சேர்த்த போது எடுத்த படம். உடன் இளைஞரணி அமைப்பாளர் விமல், துணை அமைப்பாளர்கள் ஆதவன் அதியமான், சுரேஷ், ஜெகதீஷ், சாதிக், ராஜதுரை மற்றும் கழக நிர்வாகிகள் நாகராஜன், ஸ்ரீதர், ரம்யா முத்துக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

# நாகர்கோவில் மாநகர நிர்வாகிகள் - வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் சிறப்புரையாற்றினார்!

நாகர்கோவில், செப். 29 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர நிர்வாகிகள் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் வைத்து மாநகர அவைத் தலைவர் ப. பன்னீர்செல்வம் தலைமையில் மாநகர செயலாளர் ப. ஆனந்த் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் திருமதி. விஜிலா சத்தியானந்த் ஆகியோர் கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாநகர நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

மகளிர் பயன்பெறும் வகையில் மகளிர் உரிமை தொகை திட்டம் தந்த கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

நாகர்கோவில் மாநகர 13, 27, 29 மற்றும் 31 ஆகிய வட்டங்களுக்கு வட்ட கழக பொறுப்பாளர்கள் மற்றும் வட்ட பொறுப்புக் குழு உறுப்பினர்களை நியமனம் செய்த கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், கழக பொதுச் செயலாளர் துரை முருகன் அவர்களுக்கும் மற்றும் பரிந்துரை செய்த கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் அவர்களுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

வாக்குச் சாவடி பாக முகவர் குழு உறுப்பினர்கள் (BLC) பட்டியலில் தலைமைக் கழகம் அறிவுறுத்தலின்படி தேவையான திருத்தங்களை மேற்கொண்டு ஒரு வார காலத்திற்குள் சமர்பிக்கும்படி இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா.பா.சா.பன்னீர்செல்வம்

செப்டம்பர் 29 (2014)



கழக முன்னோடிகளில் ஒருவரும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான மறைந்த மா.பா.சாரதி அவர்களின் மகன். தலைமை செயற்குழு உறுப்பினராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், கூட்டுறவு கட்டிட சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இரண்டுமுறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் சேலம், அழகாபுரம் மத்திய கூட்டுறவு சமுதாய கூடத்தில் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட வங்கிப் பற்று அட்டைகளை நேற்று முன்தினம் (27.09.2023) வழங்கினார்கள். உடன், அரசுச் செயலாளர் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை டாக்டர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன். கௌதம் சிகாமணி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.09.2023) சேலம் கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனப் பதிவு, ஓட்டுநர் உரிமம் தொடர்பான கோப்புகளை ஆய்வு செய்தபிறகு, வாகனப் பதிவு மற்றும் ஓட்டுநர் உரிமத்திற்காக விண்ணப்பிக்க வந்த பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார். இந்நிகழ்வில் தலைமைக் கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என். நேரு, சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் ஆ.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

# பெண்களின் முன்னேற்றத்திற்கு பெரும் தூண்டுகோலாக அமையும்!

## சேலத்தில் வங்கிப் பற்று அட்டைகளை வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சேலம், செப்.29-**

**‘கலைஞர்’ மகளிர் உரிமைத் திட்டம் பெண்களின் முன்னேற்றத்துக்கு பெரும் தூண்டுகோலாக அமையும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலம், அழகாபுரத்தில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கி சமுதாயக் கூடத்தில் நேற்று முன்தினம் (27.09.2023) கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான வங்கிப் பற்று அட்டைகள் வழங்கும் நிகழ்ச்சியில் 500 மகளிருக்கு வங்கிப் பற்று அட்டைகள் வழங்கினார். இந்நிகழ்வு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

பெண்கள் பொருளாதார சுதந்திரம் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் வங்கிப் பற்று அட்டைகள் வழங்கும் நிகழ்ச்சி நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.

இன்றையதினம் நடைபெற்று வரும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக 500 மகளிருக்கு வங்கிப் பற்று அட்டைகள் வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 1.06 கோடி மகளிர் பயன்பெற்றுள்ளனர். இதில் சேலம் மாவட்டத்தில் மட்டும் 5.17 இலட்சம் மகளிர் பயன்பெற்றுள்ளனர். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் சென்னைக்கு அடுத்து அதிகளவிலான மகளிர் சேலம் மாவட்டத்தில் பயன்பெற்றுள்ளனர்.





கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாடு சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகேயுள்ள பெத்தநாயக்கன்பாளையத்தில் வரும் டிசம்பர் 17ஆம் தேதி நடைபெற உள்ளதையடுத்து தயாராகி வரும் மாநாட்டுத்திடலை இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, மாவட்டக்கழகச் செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம், ஆர்.ராஜேந்திரன், டி.எம்.செல்வகணபதி மற்றும் இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர்களுடன் பார்வையிட்டார். மாநாட்டுத் திடலில் எந்தெந்த இடத்தில் பந்தல் – மேடை – நுழைவு வாயில்கள் – அமருமிடம் – ஓய்விடம் – கழிப்பறை வசதிகள் போன்றவை அமையவுள்ளது என்பது குறித்து கேட்டறிந்தார்.

**நாடே வியந்து பாராட்டும் திட்டம்!**

எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தியுள்ள இந்த முற்போக்குத் திட்டத்தினை இந்திய ஒன்றியமே வியந்து பாராட்டுகிறது. மிகக் குறுகிய நாட்களில் இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1.06 கோடி மகளிருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் 500 மகளிருக்கு வழங்கப்படும் வங்கிப் பற்று அட்டைகள் பணத்தை மட்டுமே எடுப்பதற்கான கார்டுகள் அல்ல, தங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் துருப்புச் சீட்டுகளாகும். இத்திட்டம் கர்நாடகா, தெலுங்கானா போன்ற மாநிலங்களில் செயல்படுத்தும் வகையில் முன்னோடித் திட்டமாக அமைந்துள்ளது. பெண்ணுரிமை குறித்து தந்தை பெரியார் அவர்கள் கண்ட கனவுகளுக்கு தமிழ்நாடு அரசு செயல்வடிவம் கொடுத்து வருகிறது.

பெண்களின் முன்னேற்ற மானது கலாச்சார ரீதியாகவும், சட்ட ரீதியாக வும், பொருளாதார ரீதியாகவும் தடுக்கப்பட்டுள்ளதால், இந்த மூன்று தடைகளையும் நீக்கினால் பெண்கள் சுதந்திரமாக வாழமுடியும் என்று தந்தை பெரியார் அவர்கள் கூறினார்கள். கலாச்சார ரீதியான தடைகளாக பணக்காரன், ஏழை, மேல் சாதி, கீழ் சாதி, முதலாளி, தொழிலாளி அடிமைத்தனத்தை விட ஆண், பெண் அடிமைத்தனம் கொடுமையானது என்று தந்தை பெரியார் அவர்கள் கூறினார். ஒரு காலத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வருவதற்கும், படிப்பதற்கும், வேலை பார்ப்பதற்கும் அனுமதி இல்லாமல் குடும்பத்தை கவனித்துக் கொள்வதற்கு மட்டுமே இருந்தது. இவற்றை உடைத்து பெண்ணுரிமைக்காக குரல் கொடுத்து வருகிறோம்.

**முத்தாய்ப்பான திட்டம்!**

மேலும், தந்தை மற்றும் பாட்டனார் சொத்தில் பெண்களுக்கு உரிமை இல்லாமல் இருந்த நிலையை மாற்றி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சட்ட ரீதியாக தந்தை சொத்தில் பெண்களுக்கு உரிமை உண்டு என்று சட்டத்தை நிறைவேற்றி பெண்களுக்கு சொத்தில் சம உரிமை பெற்றுத் தந்தார்கள். அதேபோல், பொருளாதார ரீதியாக பெண் சிறுமியாக இருக்கும்போது தாய் தந்தையையும், வளர்ந்த பின் தனது கணவரையும், வயது முதிர்ந்த காலத்தில் மகன், பேரன் ஆகியோரையும் சார்ந்து இருக்க வேண்டிய நிலை இருந்து வந்தது. இவற்றை நீக்கும் வகையில், புதுமைப் பெண் திட்டம், கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போன்ற திட்டங்களால் பெண்களின் சிரமம் குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை செயல்படுத்தப்பட்ட திட்டங்களில் முத்தாய்ப்பான திட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் திகழ்ந்து வருகிறது. பெண்களின் உழைப்பிற்கு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அங்கீகாரமே இந்த கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். இதனை உங்கள் சகோதரனாக பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன். இதன்மூலம் பெண்கள் கல்வி மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் உயர முடியும்.

பெண்கள் அதிகளவில் படித்து, முற்போக்காகவும், பகுத்தறிவோடும் சிந்தித்து, சுதந்திரமாக செயல்பட வேண்டும். தந்தை பெரியார் அவர்கள் கூறியது போல் ஒரு தகவலின் உண்மைத் தன்மையை அறிந்து செயல்பட வேண்டும். பொதுவாழ்வில் பெண்கள் அதிகளவில் பங்கேற்க வேண்டும் என்ற நோக்கில் ஊரக மற்றும் நகர்மன்ற உள்ளாட்சித் தேர்தல்களில் பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

பொருளாதாரத்தில் பெண்கள் வளர்வது நமது வீட்டிற்கும், சமுதாயத்திற்கும் மட்டுமின்றி ஒட்டுமொத்த நாட்டிற்கும் மிகப்பெரிய பலனைத் தருவதோடு, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமானது ஒவ்வொரு வீட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் பெரிய தூண்டுகோளாக அமையும்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

# திருப்பத்தூரில் 138 கர்ப்பிணிகளுக்கு சமுதாய வளைகாப்பு!

## அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் நடத்தி வைத்தார்!

*சிவகங்கை, செளப். 29 -*

*சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையத்தின் சார்பில் 138 கர்ப்பிணிகளுக்கு அரசின் சார்பில் இலவச சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமை ஏற்று நடத்தி வைத்தார். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் முத்து மாரியப்பன் வரவேற்றுப் பேசினார்.*

*இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பொன்மணி பாஸ்கரன், மாவட்ட சுகாதாரத் துறை இணை இயக்குனர் விஜயசந்திரன், கோட்டாட்சியர் பால் துரை, ஒன்றிய குழு தலைவர் எஸ்.சண்முக வடிவேலு, திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர்திருமதி கோகிலராணி நாராயணன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.*

*இந்த நிகழ்ச்சியில் திருப்பத்தூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர். கார்த்திகேயன், பேரூராட்சி உறுப்பினர்கள் ராஜேஸ்வரி சேகர், அமுதா, ராஜேஷ், நிர்வாகிகள். ராம.ரவி உதயம் சண்முகம், இளைஞர் அணி மாறன், மனோகரன், பொருளாளர் ஏ. எம். கண்ணன் பேரூராட்சி துணைத்தலை வர் கான்முகமது ஷாஜகான், புதூர் கண்ணன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அணைப்பாளர் கே.எஸ். நாராயணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், வட்டாட்சியர் வெங்கடேசன், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், உட்பட பலர் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சியில் 138 கர்ப்பிணி பெண்களுக்கு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் சொந்த நிதியிலிருந்து பட்டுப்புடவை, ஹார்லிக்ஸ், பேரிச்சம்பழம், பாதாம் பருப்பு போன்ற சத்துணவுகளை வழங்கினார்.*

## நெல்லை மாநகர தி.மு.க. தொண்டரணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா –

# கழக பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு - திண்டுக்கல் ஐ.லியோனி - டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை!

*நெல்லை,செப். 29 -*

*முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மாநகர தி.மு.க. தொண்டரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் கழக பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (30.09.2023 - சனிக்கிழமை) மாலை 6 மணி அளவில் மேலப்பாளையம் பஜார் திடலில் நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், மேலப்பாளையம் பகுதி துணை செயலாளர் ஆமினாபீவி, மாவட்ட மாணவர் அணி துணை செயலாளர் ரம்ஜான் அலி, மாநகர தொழிலாளர் அணி சாகுல்ஹமீது, தொ.மு.ச. சைபுதீன், வட்டச் செயலாளர் காஜாமுகைதீன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. மாநகர தொண்டரணி அமைப்பாளர் சித்திக், தொண்டரணி துணை அமைப்பாளர் ரகுமான்ஷா ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.*

*நிகழ்ச்சியை கழக வழக்கறிஞர் முகம்மது நயினார்,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிஃப்மீரான், வழக்கறிஞர் முத்துக்குமார் ஆகியோர் தொகுத்து வழங்குகின்றனர்.*

*இந்நிகழ்வில் நிதி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாநில கொள்கை பரப்பு செயலாளர், தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.*

*நிகழ்வில் மாநில மகளிர் அணி செயலாளர் பாளை தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம்,பாளை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வஹாப்,தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, மாநகராட்சி மேயர் சரவணன், துணை மேயர் ராஜ், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் பெருமாள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் லெட்சுமணன், பேச்சிப் பாண்டியன், பகுதி கழக செயலாளர்கள் துபாய் சாகுல் (மேலப்பாளையம்) சுப்பிரமணியன்(தச்சை) நமச்சிவாயம் (நெல்லை) அன்டன் செல்லதுரை (பாளை) ஒன்றிய செயலாளர்கள் அருள் மணி,மாரியப்பன், அன்பழகன், பேரூர் செயலாளர் பேச்சி குட்டி மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள்,மாநகர கழக நிர்வாகிகள், மேலப்பாளையம்,பாளை, பகுதி கழக நிர்வாகிகள், மண்டல தலைவர்கள், கழகப் பேச்சாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாநகர பிரதிநிதிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மேலப்பாளையம்,நெல்லை பேட்டை, தச்சை, பாளை, வட்ட கழக செயலாளர்கள் மேலப்பாளையம் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.*

*நிகழ்ச்சி நிறைவில் மேலப்பாளையம் இளைஞரணி தர்வேஸ் அப்துல் காதர், விளையாட்டு மேம்பாட்டு அணி சிவராம் முத்துராமன் ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.*

*நிகழ்ச்சி ஏற்பாடுகளை நெல்லை மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், மாநகர தொண்டரணி அமைப்பாளர், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சித்திக் ஆகியோர் செய்துள்ளனர்.*



தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில், தருமபுரி மேற்கு ஒன்றியம் – இலக்கியம்பட்டியில் கலைஞர் நூலகத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து சிறப்பித்தார். அதுபோது வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்பிரமணி, மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.தாமரைச்செல்வன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், பிரகாஷ், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் டாக்டர். தருண், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் எம்.ஜி.எஸ். வெங்கடேஸ்வரன், ஆர்.சிவகுரு, முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன், எம்.ஜி. சேகர்,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர்.அசோக்குமார்.பி.என்சி.மகேஷ்குமார், கலைச்செல்வன், செல்வராஜ், இராஜகோபால், கார்த்திக், முத்தமிழன், ஹரிபிரசாத்,கோடீஸ்வரன், தங்கசெழியன், நாசர் உள்பட தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, ஒன்றிய நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் குறைகளைத் தெரிவிக்க

# “ஊராட்சி மணி” குறை தீர்க்கும் மையம் திறப்பு!

## அமைச்சர் ஐ.பெரியசாமி தொடங்கி வைத்தார்!

சென்னை, செப். 29 - ஊரகப் பகுதிகளில் ஏற்படும் குறைகளைக் களையும் பொருட்டு “ஊராட்சி மணி” என்கிற அமைப்பு ஊரக வளர்ச்சி ஊராட்சித் துறையால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், பொது மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க ஊராட்சிகளைத் தொடர்பு கொள்ளும் வகையில் ஒரு இலவச குறை தீர்வு அழைப்புஎண்“155340” பிரத்யேகமாக மாநில அளவில் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இம்முறை மூலம் பொதுமக்கள் மிக எளிமையாக தொலைபேசி (155340), வலைதளம் (Ooratchimani.in) மூலம் எளிதாக அணுக முடியும்.

மேலும் பெறப்படும் புகார்களின் தன்மைக் கேற்ப அலுவலகரீதியிலான கால தாமதம் தவிர்க்கப்பட்டு குறிப்பிட்ட காலவரையறைக்குள் அப்புகார் மீது எளிய முறையில் உடனடித் தீர்வு காணப்படும்.

மேலும் ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சி பணியாளர்கள் ஆகியோருக்கு ஏற்படும் குறைகளையும், சந்தேகங்களையும் இந்த ஊராட்சி மணி மூலம் அணுகி பதில்பெறும் வகையில் இச்சேவை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி நேற்று முன்தினம் (27.09.2023) காலை 11.00 மணி அளவில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியின் போது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை முதன்மை செயலாளர், முனைவர் ப. செந்தில் குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பா.பொன்னையா, கூடுதல் இயக்குநர் (பொது), எம்.எஸ்.பிரசாந்த் மற்றும் இதர அலுவலர்கள் பங்கேற்றனர்.

ஒன்றிய அரசை விமர்சிக்கும் எதிர்க்கட்சியினரின்

# சமூக ஊடகப் பதிவுகள் முடக்கப்படுகிறது!

## திரிணாமுல் காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு!

கொல்கத்தா, செப். 29 - நாடாளுமன்ற உறுப்பினரும், திரிணாமுல் காங்கிரஸ் செய்தி தொடர்பாளருமான சாக்கேத் கோகலே வெளியிட்டுள்ள சமூக வலை தள பதிவில், மணிப்பூர் கலவரம் குறித்து பிரதமர் மோடி விளக்கமளிக்க வேண்டுமென வலியுறுத்தி கடந்த 5ம் தேதி ட்விட்டரில் பதிவிட்டிருந்தாக குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் எந்த முன்னறிவிப்புமின்றி, மோடி அரசின் உத்தரவின்படி, தனது ட்விட்டர் பதிவு முடக்கப்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து ட்விட்டருக்கு நோட்டீஸ் அனுப்பியதையடுத்து தமது பதிவு மீண்டும் வெளியிடப்பட்டதாகவும், பின்னர் அது குறித்து மின்னஞ்சல் தனக்கு அனுப்பப்பட்டதாகவும் சாக்கேத் கோகலே கூறியுள்ளார்.

கடந்த 2 மாதங்களாக ட்விட்டர் பயனாளர்கள் பலருக்கு இதுபோல நடந்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து ஒன்றிய தகவல் தொழில்நுட்ப இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகரிடம் தாம் விளக்கம் கேட்டதாகவும், அப்போது பிரதமர் மீது எதிர்க்கட்சி எம்.பி.க்கள் குற்றச்சாட்டு தெரிவிக்க இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளதா என கேள்வியெழுப்பியதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து பதிலளிக்கவில்லையெனில், அவருக்கு எதிராகவும், அவரது அமைச்சகத்துக்கு எதிராகவும் தாம் நீதிமன்றம் செல்ல நேரிடும் என எச்சரித்ததாகவும் சாக்கேத் கோகலே குறிப்பிட்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# கடலூரில் பொது மருத்துவம் - கண் சிகிச்சை முகாம்!

## கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கடலூர், செப். 29

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், மாவட்டச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி, கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறப்பு மருத்துவர்கள் கலந்து கொள்ளும் பொது மருத்துவம் மற்றும் கண் மருத்துவ முகாம் கடலூர் முதுநகரில் நடைபெற்றது.

முகாமிற்கு கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி தொடங்கி வைத்து சிறப்பித்தார். டாக்டர் பிரவின் அய்யப்பன் முன்னிலை வகித்தார். மாநகர இளைஞர் அணி துணை துணை அமைப்பாளர் கவுன்சிலர் சரத் தினகரன் வரவேற்றார்.

முகாமில் பொது மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, தோல், எலும்பு, கண்புரை, கண் தொடர்பான மருத்துவம், குழந்தைகளுக்கான மருத்துவம், இ.சி.ஜி, ரத்த பரிசோதனை குறித்த பல்வேறு சிகிச்சைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச சிகிச்சை பெற்றுக் கொண்டனர்.

மேலும் ஒரு சிலருக்கு அறுவை சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.

இதில் முன்னாள் மாவட்டப் பொருளாளர் வி.எஸ்.எல்.குணசேகரன் கவுன்சிலர்கள் கீதா குணசேகரன், பிரகாஷ், தமிழரசன், சுமதி ரங்கநாதன், மகேஸ்வரி விஜயகுமார், பாருக் அலி, கர்ணன், கீர்த்தனா ஆறுமுகம், ராதிகா பிரேம்குமார், வேலன் ஸ்டீல்ஸ் வேல்முருகன், கூட்டுறவு சங்க தலைவர்கள் ஆதி பெருமாள், ரவிச்சந்திரன், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், தொழிலதிபர் கே.ஜி.எஸ்.தினகரன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் ராதாகிருஷ்ணன், சுதாகர், ஊராட்சி மன்றத் தலைவர் முத்துக்குமாரசாமி, துணைத் தலைவர் சாந்தி பழனிவேல், சன் பிரைட் பிரகாஷ்,இளைஞர் அணி பிரகாஷ், மனோஜ், சூர்யா உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி, கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறப்பு மருத்துவர்கள் கலந்து கொள்ளும் பொது மருத்துவம் மற்றும் கண் மருத்துவ முகாம் கடலூர் முதுநகரில் நடைபெற்றது. முகாமிற்கு கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி தொடங்கி வைத்து சிறப்பித்தார். டாக்டர் பிரவின் அய்யப்பன் முன்னிலை வகித்தார். மாநகர இளைஞர் அணி துணை துணை அமைப்பாளர் கவுன்சிலர் சரத் தினகரன் வரவேற்றார். முகாமில் பொது மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, தோல், எலும்பு, கண்புரை, கண் தொடர்பான மருத்துவம், குழந்தைகளுக்கான மருத்துவம், இ.சி.ஜி, ரத்த பரிசோதனை குறித்த பல்வேறு சிகிச்சைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச சிகிச்சை பெற்றுக் கொண்டனர். மேலும் ஒரு சிலருக்கு அறுவை சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.




'பசுமைப் புரட்சியின் தந்தை' வேளாண் அறிவியலாளர்

# எம்.எஸ்.சுவாமிநாதன் மறைவு - அறிவியல் துறைக்கும் தமிழ்நாட்டுக்கும் பேரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!


சென்னை, செப். 29-

வேளாண் அறிவியலாளர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில், "பசுமைப் புரட்சியின் தந்தை - வேளாண் துறை விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் மறைவுக்கு அறிவியல் துறைக்கும், தமிழ்நாட்டுக்கும் ஈடுசெய்ய இயலாத பேரிழப்பு!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

பசிப்பிணி ஒழிப்பு உணவுப் பாதுகாப்பு என்ற இரு குறிக்கோள்களுக்காகக் கடந்த முக்கால் நூற்றாண்டு காலம் அரும் பணி ஆற்றி வந்த தலைசிறந்த வேளாண் அறிவியலாளர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்துகிறேன்.

நீடித்து நிலைத்த உணவுப் பாதுகாப்புக்காக ஆற்றிய பங்களிப்புகளுக்காக பசுமைப் புரட்சியின் தந்தை எனப் பரவலாகப் போற்றப்படும் சுவாமிநாதன் அவர்கள் உலக அரிசி ஆராய்ச்சி நிறுவனம் (IRRI), இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR) முதலிய பல்வேறு பன்னாட்டு மற்றும் அரசு ஆராய்ச்சி நிறுவனங்களின் உயர் பொறுப்புகளில் பணியாற்றிய சிறப்புக்குரியவர் ஆவார். ஒன்றிய வேளாண்



அமைச்சகத்தின் முதன்மைச் செயலாளராக இருந்த அவர் பின்னர் மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

சமூகத் தலைமைக்கான ராமன் மகசேசே விருது, பத்ம ஸ்ரீ, பத்ம பூசண், பத்ம விபூசண் உள்ளிட்ட பல உயரிய விருதுகளை வென்ற சுவாமிநாதன் அவர்கள், இருபதாம் நூற்றாண்டில் மிகப் பெரும் தாக்கம் செலுத்திய ஆசிய ஆளுமைகள் என உலகப் புகழ் பெற்ற "டைம்" இதழ் வெளியிட்ட பட்டியலில் மகாத்மா காந்தி, இரவீந்திரநாத் தாகூர் ஆகியோருடன் இடம்பெற்ற இந்தியர் ஆவார்.

நாடு போற்றும் விஞ்ஞானியாக சுற்றுச்சூழல் வேளாண்மைத்துறையில் அளப்பரிய பங்காற்றிய சுவாமிநாதன் அவர்கள் 1989-91, 1996-2000 ஆகிய ஆண்டுகளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மாநிலத் திட்டக் குழுவிலும் இடம்பெற்று சீரிய ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

தலைவர் கலைஞருடனும், என்னுடனும் எப்போதும் நல்ல நட்பைப் பேணி வந்தார். 1989ஆம் ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் சுவாமிநாதன் அவர்கள் கோரிக்கை வைத்ததும், தரமணியில் அவர் நிலம் வழங்கிய இடத்தில்தான் கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக, 'எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்' செயல்பட்டு வருகிறது.

கடந்த 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அந்நிறுவனத்தின் 32ஆவது ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றி, 96 ஆவது பிறந்தநாள் காணவிருக்கும் சுவாமிநாதன் அவர்கள் நூறாண்டு வாழ்க என வாழ்த்தியது தற்போது என் நெஞ்சில் நிழலாடுகிறது.

அவரது இழப்பு அறிவியல் துறைக்கும் தமிழ்நாட்டுக்கும் ஈடு செய்ய இயலாத பேரிழப்பாகும்.

மிகப்பெரும் ஆளுமையை இழந்து தவிக்கும் அறிவியல் உலகினருக்கும் அவரது குடும்பத்தார்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



திருச்சியில் மூளைச்சாவு அடைந்து, உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்ட பாதிரியார் பிரான்சிஸ் சேவியர் அவர்களின் உடலுக்கு தமிழக அரசின் சார்பில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிக்கோ இருதயராஜ், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

அரசியல் மற்றும் ஆட்சி நடத்துவதில் முதல்வருக்கு உறுதுணையாக இருந்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மிகச் சிறப்பாக செயல்படுகிறார்!

## சேலம் அரசு விழாவில் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

சேலம், செப். 29 -

"அரசியல், ஆட்சி நடத்துவதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதல்வருக்கு உறுதுணையாக இருந்து மிகச் சிறப்பாகச் செயல்படுகிறார்'' என்று அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் கூறினார்.

சேலத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் விழாவிற்கு தலைமையேற்று அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் பேசியதாவது :

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் பேசியதாவது :

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற போது 7 முக்கியமான திட்டங்களை அறிவித்தார்கள். அந்தவகையில், 7 திட்டங்களையும் ஒவ்வொன்றாக நிறைவேற்றி இறுதியாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தையும் நிறைவேற்றி, 1.06 கோடி மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கியுள்ளார்கள். முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் தகுதியான மகளிர் விடுபட்டிருந்தால் மீண்டும் விண்ணப்பிக்கலாம்.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் நாள்தோறும் பல்வேறு பணிகள், சுற்றுப் பயணங்கள் செய்து பணி



யாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல், இளைஞர் நலன் மற்றும் விளை யாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அரசுப் பணிகளை ஒருங்கிணைத்து உடனடியாக அந்த பணிகளை நிறைவேற்றுவதற் குரிய ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள்.

**கொட்டும் மழையில் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!**

அந்தவகையில், நேற்றிரவு இரவு 10 மணியளவில் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் சேலம் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அங்கு தங்கிப் பயின்றுவரும் மாணவர்களிடம் அவர்களுக்குத் தேவையான வசதிகள் குறித்து கேட்டறிந்து, உடனடியாக நிறைவேற்றித்தரப் படும் என்று கூறினார்கள். அந்த வகையில் தற்பொழுது இந் நிகழ்ச்சியிலேயே ரூ.1.15 இலட்சம் மதிப்பிலான விடுதி மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்படுகிறது.

மகன், தந்தைக்கு ஆற்றும் உதவி என்பதுபோல அரசியல் மற்றும் ஆட்சி நடத்துவதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று பொது மக்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைவரையும் சந்தித்து, அவர்களுக்குத் தேவையானவற்றை கேட்டறிந்து, முறையாக அரசுக்குத் தெரிவித்து நிறைவேற்றி வருகிறார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு மிகவும் பிடித்த மாவட்டத்தில் இது போன்ற நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்.

இவ்வாறு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

இந்நிகழ்ச்சியில், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அரசுச் செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன்.கௌதம் சிகாமணி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள்,

மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.அலர்மேல் மங்கை, உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி தி.சுவாதி ஸ்ரீ, முன்னாள் அமைச்சர் டி.எம். செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர்.சிவலிங்கம், அஸ்தம்பட்டி மண்டலக்குழு தலைவர் திருமதி உமாராணி, கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் ப.இரவிக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள், பொது மக்கள் கலந்துகொண்டனர்.

பா.ஜ.க. ஆளும் மத்தியப் பிரதேசத்தில் கொடூரச் சம்பவம்:

# 12 வயது சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை!

## பெண்களுக்கு எதிரான கட்சி பா.ஜ.க. என - காங்கிரஸ் கடும் குற்றச்சாட்டு!

போபால், செப். 29-

மத்தியப் பிரதேசத்தில் சிவ்ராஜ் சிங் சவுகான் தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி நடைபெறுகிறது. இந்த மாநிலத்தின் உஜ்ஜைனி நகரத்தில் இருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பட்நகர் சாலையில் 12 வயது சிறுமி அரை நிர்வாண கோலத்துடன் வீடு வீடாகச் சென்று உதவி கோரும் காட்சி அங்குள்ள சிசிடிவி கேமராவில் பதிவாகியுள்ளது.

அந்த சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட பிறகு ரத்தம் சொட்ட சொட்ட சென்று ஒவ்வொரு வீடாக கதவை தட்டி உதவி கோரியுள்ளார். ஆனால், சிறுமியை விரட்டியடித்துள்ளனர்.

இறுதியில் ஆசிரம நிர்வாகிகள் சிறுமியை மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

சிறுமியை மருத்துவர்கள் பரிசோதனை செய்த போது அவர் கூட்டு பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டது தெரிய வந்தது.

சிறுமியின் உடலில் காணப்பட்ட காயங்கள் தீவிரமாக இருந்ததால் அவர் மேல் சிகிச்சைக்காக இந்தூருக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மணிப்பூர் கலவரத்தின் போது 2 பழங்குடியின பெண்கள் ஒரு கும்பலால் இழுத்து செல்லப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட வீடியோ வெளியாகி நாடு முழுவதும் அதிர்வலைகளை உருவாக்கியது. இந்த நிலையில், பா.ஜ.க. ஆளும் மத்தியப்பிரதேசத்தில், பாலியல் வன்கொடுமைக்கு ஆளான சிறுமி உதவி கேட்டுச் செல்லும் வீடியோ சமூக வலைதளங்களில வெளியாகி மீண்டும் மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மத்தியப் பிரதேசத்தில் நடந்த கொடூர சம்பவத்தைக் குறிப்பிட்டு , பெண்களுக்கு எதிரான கட்சி பா.ஜ.க என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடுமையாக விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், பெண்களுக்கான இட ஒதுக்கீடு பற்றி ஊர் ஊராகச் சென்று பேசி கைதட்டல் வாங்க மோடி முயற்சிக்கிறார். ஆனால் பா.ஜ.க. ஆளும் மத்தியப்பிரதேசத்தில் 12 வயது சிறுமி பாலியல் வல்லுறவு செய்யப்பட்டிருக்கிறார்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை வழக்குகள் அதிகம் பதிவாவது பா.ஜ.க. ஆளும் மத்தியப் பிரதேசத்தில்தான். ஒவ்வொரு நாளும் 8 வல்லுறவு வழக்குகள் பதிவாகின்றன. பிரதமர் மோடியும் மாநில முதல்வர் சிவ்ராஜ் சிங்கும் தேர்தல் பிரசாரத்தை விட்டுக் கொஞ்சம் வந்தால், மத்தியப்பிரதேச பெண்களின் அலறல் சத்தத்தை அவர்கள் கேட்க முடியும் என்று மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தை குறிப்பிட்டு மத்தியப்பிரதேச முன்னாள் முதல்வரும், காங்கிரஸ் தலைவருமான கமல்நாத் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "12 வயது சிறுமி பாலியல் வல்லுறவுக்குள்ளாகி ரத்தம் வழிய வீடு வீடாகச் சென்று ஒரு மணி நேரமாக உதவி கேட்டும் யாரும் உதவ முன்வராத அதிர்ச்சி சி.சி.டி.வி. காட்சிதான் இது என்று குறிப்பிட்டுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்திற்கு மாநில பா.ஜ.க. அரசு ஒரு கோடி ரூபாய் நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

# எதிர்க்கட்சி எம்.பி.யை ஆபாசமாக பேசிய பா.ஜ.க. எம்.பி.க்கு புதிய பொறுப்பு!


## வெறுப்புணர்வுக்கான வெகுமதி என எதிர்க்கட்சிகள் கடும் விமர்சனம்!


புதுடெல்லி, செப். 29-

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.பி.யை ஆபாசமாக பேசிய பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பிதுரிக்கு புதிய பொறுப்பு வழங்கியது, வெறுப்புணர்வுக்கான வெகுமதி என எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன.

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடரின் போது, பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினரான ரமேஷ் பிதுரி, பகுஜன் சமாஜ் கட்சி எம்.பி. டேனிஷ் அலியை நோக்கி வெறுப்புணர்வை தூண்டும் வகையிலான கருத்தை பேசி இருந்தார். இது, சிறுபான்மையின வெறுப்பு பேச்சு என பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. பா.ஜ.க. எம்.பி. ரமேஷ் பிதுரி மீது நடவடிக்கை எடுக்காமல் அவருக்கு பா.ஜ.க. புதிய பொறுப்பு வழங்கியுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தில் டோங் மாவட்டத்தின் தேர்தல் பொறுப்பாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு, எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.





# சுற்றுலாத் துறையில்

# சிறப்பாகச் செயல்பட்ட நிறுவனங்களுக்கு விருது!

## அமைச்சர்கள் வழங்கினர்!

சென்னை,செப்.29-

சுற்றுலாத்துறையில் சிறப்பாக செயல்பட்டு வரும் 54 தொழில் நிறுவனங்கள், அரசுத்துறைகள், சுற்றுலா செயல்பாட்டாளர்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு , சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் தமிழ்நாடு சுற்றுலா விருதுகளை வழங்கினார்கள்.

சென்னை கலைவாணர் அரங்கில் உலக சுற்றுலா தினத்தையொட்டி தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் 2023 வழங்கும் விழா சுற்றுலா, பண்பாடு, அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தலைவர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் டாக்டர். க.மணிவாசன். தலைமையில் நேற்று முன்தினம் (27.9.2023) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் சுற்றுலாத் துறையில் சிறப்பாக செயல்பட்டு வரும் 54 தொழில் நிறுவனங்கள், ஓட்டல்கள், டிராவல் நிறுவனங்கள், அரசுத் துறைகள்உள்ளிட்ட சுற்றுலா செயல்பாட்டாளர்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா விருது களை வழங்கினார்கள். தொட ர்ந்து சுற்றுலா வழிகாட்டிகளுக்கான நெறிமுறைகள் பதிவுத்திட்டம் - 2023 மற்றும் சுற்றுலா சேவை வழங்கு பவர்களுக்கு பதிவுகள் மேற்கொள்வதற்கான திட்டம் ஆகிய திட்டங்களை தொட ங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி முன்னிலை வகித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறையும், Global Media Boxம் இணைந்து சுற்றுலா தொடர்பான சிறந்த புகைப்படம் மற்றும் வீடியோ எடுப்பதற்கான WoW தமிழ்நாடு போட்டியில் வெற்றி பெற்ற 24 நபர்களுக்கு அமைச்சர் பெருமக்கள் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கினார்கள்.

மேலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தி இந்து நிறுவனம், மெட்ராஸ் போட்டோ பிளாக்கர்ஸ் ஆகியோர் இணைந்து நடத்திய புகைப்பட போட்டியில் வெற்றி பெற்ற 5 நபர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. இ.கமலா மற்றும் சுற்றுலாத் துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள், அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# தேனி வடக்கு மாவட்ட மாணவரணி பொறுப்புகளுக்கான நேர்காணல் தற்காலிகமாக ஒத்திவைப்பு!

## மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்செல்வன் அறிவிப்பு!



தேனி வடக்கு மாவட்ட மாணவரணி ஒன்றிய, நகர, பேரூர், பொறுப்புகளுக்கு இன்று (29.9.2023 - வெள்ளிக்கிழமை) நடைபெறவிருந்த நேர்காணல் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகிறது.

நேர்காணல் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

**தங்கதமிழ்செல்வன்**
செயலாளர்
தேனி வடக்கு மாவட்ட தி.மு.க.



தமிழ்நாடு அரசு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் கீழ் இயங்கும் நாட்டு நல பணி திட்ட சிறப்பு முகாம் இராமநாதபுரம் மாவட்டம் சத்திரக்குடி அரசினர் மேல் நிலைப்பள்ளி சார்பாக போகலூர் ஒன்றியம் தீயனூர் ஊராட்சி சார்பாக நடைபெற்றது. சிறப்பு முகாமினை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன் துவக்கி வைத்தார். இதில் போகலூர் ஒன்றிய துணைத் தலைவர் வழக்கறிஞர் பூமிநாதன்,ஒன்றிய செயலாளர், மாவட்ட கவுன்சிலர் வழக்கறிஞர் கே.கதிரவன், தீயனூர் ஊராட்சி மன்ற தலைவர் சாத்தாயி மற்றும் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கையில் புலவர் பகீரதநாச்சியப்பன் எழுதிய குறளின் பொருள் நூலினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் வெளியிட்டார். இதில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், ப.மாணிக்க தாகூர்எம்.பி, முன்னாள் எம்.எல். ஏக்கள் வே.ராஜசேகரன் எஸ்.குணசேகரன், நகர்மன்றத் தலைவர் சி.எம்.துரை.ஆனந்த்,தமிழ்ச்சங்க நிர்வாகிகள் சே. கண்ணப்பன், ஜவகர்கிருஷ்ணன் ஆகியோர் உள்ளார்கள்.

### வெம்பக்கோட்டை அகழாய்வில்

# சுடுமண் குடுவை கண்டெடுப்பு!

விருதுநகர்,செப்.29-

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் நடைபெற்று வரும் 2ம் கட்ட அகழ்வாராய்ச்சியில்தங்க அணிகலன், தங்கதாலி, ஆண் உருவ சுடுமண் பொம்மை, யானை தந்த பகடைக்காய், சுடுமண்அகல்விளக்கு, சுடுமண் அணிகலன், சங்கு, துதியாளி பொறிக்கப்பட்ட வேணாட்டு சிற்றரசு கால செப்பு நாணயம் உள்ளிட்ட எண்ணற்ற தொன்மையான தொல் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில். தற்போது சுடுமண் குடுவை கண்டெடுக்கப் பட்டுள்ளது. பூக்கள் போன்ற அலங்காரம் செய்யப்பட்டுள்ள குடுவையில் தண்ணீர் சேமித்து வைக்க தொன்மையான மனிதர்கள் பயன்படுத்தி இருக்கலாம் என தொல்லியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.




சீர்மிகு நகர திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் மாநிலங்களுக்கு, ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தினால் வழங்கப்படும் விருதுகளில், இந்தியாவின் இரண்டாவது சிறந்த மாநிலமாக தேர்வு செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டிற்கான விருதினை செப்டம்பர் 27 அன்று மத்தியப்பிரதேசத்தின் இந்தூரில் நடந்த விழாவில், குடியரசுத் தலைவரிடமிருந்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர்.தா.கார்த்திகேயன் பெற்றுக் கொண்டார்.

### புலவர் சொ.பகீரத நாச்சியப்பன் எழுதிய குறளின் பொருள் நூல் வெளியீட்டு விழா!

# திருக்குறளின் பெருமையை உலகறியச் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

### அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பேச்சு!

சிவகங்கை. செப். 29-

சிவகங்கை தமிழ் சங்கத்தின் சார்பில் நல்லாசிரியர் புலவர் சொ. பகீரத நாச்சியப்பன் எழுதிய குறளின் பொருள் நூல் வெளியீட்டு விழா சிவகங்கை தமிழ் சங்கத் தலைவர் நல்லாசிரியர் செ.கண்ணப்பன் தலைமையில். ப. மாணிக்கம் தாகூர் எம்.பி. முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்ச்சங்கம் நிறுவனத் தலைவர் ஜவகர்கிருஷ்ணன் வரவேற்றுப் பேசினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ராஜசேகரன், எஸ். குணசேகரன், சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம். துரை ஆனந்த்,சேவாசமாஜ செயலாளர் இரா.கோட்டை குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

நிகழ்ச்சியில் குறளின் பொருள் நூலினை வெளியிட்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது:-

திருக்குறளில் இல்லாதது வேறு எந்த நூலிலும் இல்லை. வாழ்க்கை நெறிமுறைகளை நாம் வாழும் வகைகளை அழகாக திருவள்ளுவர் எடுத்துக் கூறியுள்ளார். அனைத்து மதத்தினரும் அனைத்து ஜாதியினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைந்துள்ள ஒரே நூல் திருக்குறள் ஆகும். திருக்குறளுக்கு நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, பரிமேலழகர், வரதராசனார், வ.உ.சி. ஆகியோர் பல்வேறு பொருளில் உரைகள் எழுதியுள்ளனர். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய குறளில் பொருள் பாராட்டுக்குரியதுஆகும். தலைவர் கலைஞர் எழுதிய குறளோவியம் அனைவரின் பாராட்டினை பெற்றது.

பொதுமறையான திருக்குறளை உலகம் முழுவதும் இன்று ஒலிக்கச் செய்ததில் கலைஞரின் பங்கு பாராட்டுக் குரியது. திருக்குறளை உலகம் முழுவதும் அறியும் வகையில் பணியாற்றிய பெருமை முத்தமிழறிஞர் கலைஞருக்கே உரியதாகும். திருக்குறளுக்கு பொருள் எழுதிய பட்டியலில் புலவர் பகீரதநாச்சியப்பனும் இடம் பெறுகிறார் என்பது மகிழ்ச்சியான செய்தி ஆகும். இஸ்லாமியர்களுக்கு பைபிள், கிறிஸ்துவர்களுக்கு குரான் இருப்பது போல் நமக்கு திருக்குறள் என்பது தான் பொதுமறை ஆகும். பொது நூலாகும். பல்வேறு மதத்தினர் திருக்குறளை படித்து அதன் பெருமையை உணர்ந்துள்ளார்கள். திருக்குறளுக்கு பேருந்தில் அனைத்து மக்களும் தெரிந்து கொள்ளும் வகையில் குறளை எழுதி,அதற்கு பொருளையும் எழுதி பாராட்டு பெற்றவர் கலைஞர் ஆவார். திருவள்ளுவருக்கு உருவம் கொடுத்தவரே தலைவர் கலைஞர் அவர்கள் தான். திருவள்ளுவரின் பெருமையை உலகறியச் செய்திடும் வகையில் சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைத்தார். குமரியில் 133 அடி உயரத்தில் வள்ளுவர் சிலையினை அமைத்து பெருமை சேர்த்தார்.

தமிழுக்கும் தமிழ் மொழிக்கும் பெருமை சேர்த்த தலைவர்களில் தலைவர் கலைஞர் முதலிடம் பெற்று சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளார்.உலக மொழிகளில் பல மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.தலைவர் கலைஞர் வழியில் நம்முடைய தமிழக முதல்வர் தளபதி அவர்களும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு வருகிறார். பல்வேறு பணிகளையும் செய்து வருகிறார்.

இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன். நகர்மன்ற துணைத்தலைவர் எம். கார் கண்ணன், ஒன்றிய செயலாளர்கள் எம்.ஜெயராமன் திருமலை முத்துராமலிங்கம், கே.எஸ். ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, சுரேஷ்குமார், சேவா சமாஜ பொருளாளர் தங்கமணி, ஏ.ஆர். பி. முருகேசன், முன்னாள் மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் ப.சத்திய மூர்த்தி ராஜரத்தினம்,உயர் நீதிமன்ற வழக்கறிஞர் அ.தேவராஜ்மானா மதுரை நகர் கழக செயலாளர் க.பொன்னுச்சாமி உட்பட பலர் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சியினை சி.குமார், திருமதி சுமித்ரா ஆகியோர் தொகுத்து வழங்கினார்கள், உயர்நீதிமன்ற வழக்கறிஞர். இ.எம்.எஸ். ஜெயசிம்மன் நன்றி கூறினார். ஏரியூர் பட்டதாரி அறிவுச்செல்வம் வாழ்த்துப்பா வாசித்தார். கவிஞர் ஜெயம்கொண்டான் திருக்குறள் குறித்து விளக்கிப் பேசினார்.

### கழக ஆட்சியில்தான் - பல ஆண்டுகளாக

# ஓடாமலிருந்த கோயில் தங்கத் தேர்களை உலாவரச் செய்துள்ளோம்!

### புரசைவாக்கத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, செப்.29-

புரசைவாக்கம், கங்காதரேசுவரர் திருக்கோயிலுக்கு ரூ.6.81 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத்தேர் மற்றும் மரத்தேர் செய்யும் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (27.09.2023) சென்னை, புரசைவாக்கம், கங்காதரேசுவரர் திருக்கோயிலில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத் தேர் செய்திட ரூ.31.5 லட்சம் மதிப்பீட்டில் மரத்தேர் உருவாக்கும் பணி மற்றும் ரூ.81 லட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் திருப்பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பின் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவுற்ற திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், நீண்ட காலமாக நிலுவையிலுள்ள திரு க்கோயில் திருப்பணி களை விரைந்து முடித்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில்களில் பக்தர்கள் நேர்த்திகடன் செலுத்துவதற்காக தங்கத்தேர், வெள்ளித்தேர் மற்றும் மரத்தேர்களை உருவாக்குவது போன்ற பணிகளை இந்து சமய அறநிலையத்துறை துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்றபின், ரூ.31.24 கோடி மதிப்பீட்டில் 51 புதிய மரத்தேர்கள் செய்வதற்கும், ரூ.4.12 கோடி மதிப்பீட்டில் 13 மரத்தேர்களை மராமத்து செய்வதற்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. புரசைவாக்கம், கங்காதீஸ்வரர் திருக்கோயில், நங்கநல்லூர், ஆஞ்சநேயர் திருக்கோயில், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத்தேர் செய்வதற்கும், இருக்கன்குடி, மாரியம்மன் திருக்கோயில், சென்னை, காளிகாம்பாள் திருக்கோயில், திருக்கருக்காவூர், கர்ப்பகரட்சாம்பிகை திருக்கோயில், திருநெல்வேலி, நெல்லையப்பர் திருக்கோயில், திருத்தணி, சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய 5 திருக்கோயில்களுக்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் புதிய வெள்ளித்தேர்கள் செய்வதற்கும் அறிவிப்பு செய்திருந்தோம்.

அதன்படி இன்றைய தினம், புரசைவாக்கம், கங்காதரேசுவரர் திருக்கோயிலுக்கு ரூ.6 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத் தேர் செய்திட உபயதார நிதியின் மூலம் ரூ.31.5 லட்சம் மதிப்பீட்டில் மரத்தேர் உருவாக்கும் பணி மற்றும் ரூ.81 லட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் திருப்பணிகளை தொடங்கி வைத்தோம். நங்கநல்லூர், ஆஞ்சநேயர் திருக்கோயில் தங்கத்தேர் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வெள்ளித்தேர் உருவாக்கும் பணி நிறைவு



பெற்று தணிகை முருக பெருமானுக்கு அர்ப்பணிப்பு செய்யப்பட்டது.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் பல ஆண்டு காலமாக ஓடாமல் இருந்த திருக்கோயில் தங்கத்தேர்களை மீண்டும் உலாவர செய்துள்ளோம். குறிப்பாக 12 ஆண்டுகள் ஓடாமல் இருந்த ராமேஸ்வரம் தங்கத்தேர், 10 ஆண்டுகள் ஓடாமல் இருந்த சமயபுரம் தங்கத்தேர், 5 ஆண்டுகள் ஓடாமல் இருந்த திருத்தணி தங்கத்தேர், 2 ஆண்டுகள் ஓடாமல் இருந்த வடபழனி மற்றும் திருச்செந்தூர் தங்கத்தேர்களை ஓட வைத்த ஆட்சி இந்த ஆட்சியாகும்.

புரசைவாக்கம், கங்காதரேசுவரர் திருக்கோயிலுக்கு ஒட்டுமொத்தமாக ரூ.10 கோடி செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் தங்கத்தேர் மற்றும் மரத்தேர் பணிகளை தவிர்த்து சுமார் ரூ.4 கோடி மதிப்பீட்டில் இராஜகோபுர விமானங்கள் மற்றும் சன்னதிகளின் மராமத்து பணி மற்றும் வர்ணம் பூசும் பணி, பிரகாரத்தில் கருங்கல் பதிக்கும் பணி, மின் பணிகள், நந்தவனத்தை சீரமைத்தல், காரியக் கூடம் திரும்ப கட்டுதல், திருக்குளத் திருப்பணி போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை சென்னை மாவட்ட அறங்காவலர் குழு தலைவர், இத்திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் முழு ஈடுபாட்டோடு கண்காணித்து விரைவுபடுத்தி வருகிறார்கள். இத்திருக்கோயிலுக்கு அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் திருப்பணிகள் நிறைவுற்று குடமுழுக்கு நடத்தப்படும்.

வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ள நிலையில் திருக்கோயில்களின் அனைத்து திருக்குளங்களையும் சுத்தப்படுத்தி மழைநீரை சேகரித்து தேக்குவதற்கான கட்டமைப்புகளை சீரமைத்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஏற்கனவே துறையால் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி திருக்கோயில் திருக்குளங்கள் தூர்வாரி சுத்தப்படுத்தப்பட்டு மழைநீரை சேகரிக்கும் வகையில் தயாராகி வருகின்றன.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் அ.சங்கர், இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை, உதவி ஆணையர் (கூடுதல் பொறுப்பு) திருமதி சி.நித்யா, சென்னை மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கே.எஸ்.ரவிச்சந்திரன், திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் டாக்டர் பெ.வெற்றிக்குமார், அறங்காவலர்கள் எம்.ஏ.கோபிநாத், கே.எஸ்.குமாரசாமி, பி.ரத்தினம், திருமதி நா. லீலாவதி, செயல் அலுவலர் சா.இராமராஜா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ளவர்கள் அதிக அளவில்

# தமிழ்நாட்டில் சுற்றுலா பயணம் செய்ய வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்!

### அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

சென்னை, செப். 29-



உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு “தமிழகத்தை கண்டு மகிழ்வோம் - 2023 (Discover Tamil Nadu-2023)” என்ற சமூக ஊடகவியலாளர்களின் சுற்றுலா பயணத்தையொட்டி, சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் சுற்றுலா பேருந்தை கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.

தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்களின் சிறப்புகளை வெளிமாநிலத்தவர்கள் அறிந்து, தமிழ்நாட்டு சுற்றுலாத் தலங்களை பார்வையிட வரவழைக்க செய்வதற்காக வெளிமாநிலங்களில் அதிக அளவில் பார்வையாளர்களை கொண்ட சமூக வலைதள ஊடகவியலாளர்களை தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பேருந்து மூலம் சுற்றுலா செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உலக சுற்றுலா தினத்தையொட்டி நேற்று (27.9.2023) சென்னை தீவுத்திடல் டிரைவ் இன் ஓட்டல் வளாகத்தில் “தமிழகத்தை கண்டு மகிழ்வோம் - 2023 (Discover Tamil Nadu-2023)” என்ற சமூக ஊடகவியளாளர்கள் சுற்றுலா பயண தொடக்க நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் சமூக ஊடகவியலாளர்களின் சுற்றுலா பேருந்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் தலைவர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் டாக்டர்.க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப்நந்தூரி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் தமிழ்நாடு சுற்றுலா சிறப்புகள் குறித்து கையேடுகள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தாவது,

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை சுற்றுலாத் துறையில் முதன்மை மாநிலமாகவும், உலக வரைபடத்தில் சுற்றுலா பயணிகளின் விருப்பமாக இடமாக தமிழ்நாட்டை உருவாக்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா கொள்கையை வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டின் சுற்றுலாத்தலங்களின் சிறப்புகள் குறித்து தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் சமூக ஊடக வலைதளங்களான யூ டியூப், பேஸ்புக், எக்ஸ் (டிவிட்டர்), இன்ஸ்டாகிராம் உள்ளிட்டவற்றில் புகைப்படங்கள், வீடியோக்கள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சுற்றுலாத்துறை பேஸ்புக் பக்கத்தை 1,78,000 நபர்களும், இன்ஸ்டாகிராம் பக்கத்தை 89,500 நபர்களும், எக்ஸ் பக்கத்தை 76,600 நபர்களும், யூ டியூப் -ஐ 11,100 நபர்களும் பின் தொடர்ந்து சுற்றுலாத் தலங்கள், விழாக்கள், திருவிழாக்கள் குறித்த தகவல்களை அறிந்து வருகின்றார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாமல்லபுரத்தில் பல்வேறு நாடுகளின் வீரர்கள் பங்கேற்ற செஸ் ஒலிம்பியாட் போட்டியைசிறப்பாக நடத்தியதுடன், தொடக்க விழா மற்றும் நிறைவு விழா நிகழ்ச்சிகளை உலகின் பல்வேறு புகழ்வாய்ந்த விளையாட்டு போட்டிகளுக்கு இணையாக நடத்திக் காட்டி, மாமல்லபுரத்தினை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் விருப்பமிகு சுற்றுலாத் தலமாக உருவாக்கினார்கள். மேலும் விளையாட்டுத் துறை அமைச்சர் மாமல்லபுரத்தில் சர்வதேச அலைச்சறுக்கு (சர்ப்பிங்) விளையாட்டு போட்டிகளை நடத்தியுள்ளார்கள்.

கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023 ல் ஜூலை மாதம் வரை 7 மாத காலத்தில் மட்டும் 6,42,379 ஆக உயர்ந்துள்ளது.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023-ல் ஜூலை மாதம் வரை 7 மாத காலத்தில் 16,70,59,561 என உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில் முட்டுக்காடு, உதகமண்டலம், பைக்காரா, முதலியார் குப்பம், பிச்சாவரம், ஏற்காடு, கொடைக்கானல், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் படகு குழாம்களை இயக்கி வருகிறது. இங்கு வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

2022 - 2023 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகு குழாம்கள் மூலமாக இயக்கப்படும் படகுகளில் மொத்தம் 42,22,945 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

2023 - 2024 ஆம் நிதியாண்டில் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் மாதம் வரை 5 மாதங்களில் மட்டும் மொத்தம் 24,17,436 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இந்தியா முழுவதும் மற்றும் வெளிநாடுகளிலும் சுற்றுலா பயணிகள் தமிழ்நாட்டில் சுற்றுலா பயணம் மேற்கொள்ள வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொதுமேலாளர் திருமதி.இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற பேச்சு போட்டியினை, கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் தொடங்கிவைத்து, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினர். உடன் சி.சுந்தரபாண்டியன், சி.ராம்காந்த், மங்கலம் பிரபாகரன், கா.சு.இளங்கோவன், சீனுவாசன், கே.சுந்தரம், ஆ.மோகன்ராஜ், மு.தினேஷ்பாபு, எஸ்.பிரகாஷ், பா.வினோத்குமார், து.மணியரசு உட்பட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. முனியசாமி

### செப்டம்பர் 29 (2009)



இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

குடியாத்தம் ஒன்றிய பொறுப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.




தி.மு.கழக மாநில ஆதி திராவிட நலக்குழு & சிறுபான்மை நல உரிமைக்குழு பிரிவு

# திராவிட சினிமா

25

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

## ‘அவன் பித்தனா?’ திராவிடம் ‘பேசும்’ படம்!

படங்கள் உதவி : ஞானம்







கலைஞர் திரைப்படங்களை மீள்பார்வையாகப் பார்க்கும்போது தொடர்ந்து பல வியப்புகளுக்கு ஆளாகியபடியிருக்கிறேன். ஒரு திரைப்பட ஆய்வாளனாகவே அவற்றை அணுகுகிறேன். அந்த அணுகுமுறை எப்போதும் நான் அறிந்த அளவிலான ஆய்வுப்புல கருத்தியல் அடிப்படைகளைக் கொண்டதாகவே இருப்பதை உறுதி செய்துகொள்கிறேன்.

என் எழுத்துகள் பிறரின் பரிசீலனைக்குள்ளாகும் சூழலில், எனது ஆய்வுப் பொருண்மைகள் வெற்று விதந்தோதல்கள் எனப் புறந்தள்ளப்பட்டு விடக்கூடாது என்பதில், மிகுந்த கவனத்துடன் செயல்படுகிறேன். என் எழுத்துகள் கலைஞருக்கு, அவருக்கில்லாத எந்தப் புகழையும் புதிதாக வழங்கிவிட முடியாது என்பதில் மிகத் தெளிவாக இருக்கிறேன். ஆனால், திராவிடக் கருத்தியல் வளத்தால் ஓர் ஆய்வாளனாக இருக்கும் எனது புரிதல்கள், அந்தப் படைப்புகள் குறித்த ஒரு சிறு புதிய திறப்புக்கும், அவை குறித்த குறை மதிப்பீடுகளுக்கும் பதில் இருப்பதற்கு வழிவகுக்குமானால், அதுவே நான் எனது திராவிடக் கருத்தியல் ஆசான்களுக்குச் செய்யும் நன்றி.

கலைஞர் திரைப்படங்கள் குறித்துத் தொடர்ந்து எழுதப்படும் எனது பார்வைகள், அவரை முதன்மையாக ஒரு திரைக்கதையாசிரியராகவே கொள்கிறது. அதைத் தொடர்ந்து அவரது வசனங்கள். ஒரு திரைக்கதை வகுக்கும் தடத்திலேயே திரைப்பட ஆக்கம் நிகழ்கிறது. அந்தத் தடம் காட்சிகளாகக் கட்டமைக்கப்படும்போது அவற்றிற்கான வசனத் தேவைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

ஒரு திரைக்கதையாசிரியர் ஓர் இயக்குநரின் பணிக்கான அடிப்படைகளை உருவாக்கிக் கொடுக்கிறார். ஒரு நிபுணத்துவம் பெற்ற திரைக்கதையாசிரியர் பெரும்பாலும் தான் எழுதிய கதைகளுக்குள் மட்டும் அதனைச் சுருக்குவதில்லை. ஏற்கெனவே நாம் பார்த்ததுபோலக் கலைஞர் ஒரு மாபெரும் திரைக்கதையாசிரியராக உருவெடுப்பது, அவர் பிறரது கதைகளுக்கு எழுதிய திரைக்கதைகள் வழியாகவே.

### கலைஞர் குரலில் கதை

‘அவன் பித்தனா?’ ஒரு தெலுங்குப் படத்தின் மறு ஆக்கமே. கலைஞரின் குரல் திரைப்படத்தை அறிமுகம் செய்கிறது. ஒரு பெரும் பணக்காரத் தந்தை தனது ஒரே மகனின் காதல் கலப்புத் திருமணத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். தனித்து வறுமையில் வாழும் மகன் நோயுற்று மரணப்படுக்கையில் இருப்பதாக அறிந்து, மனங்கலங்கி தன் தவற்றை உணர்ந்து செல்வதற்குள் மகனும் மருமகளும் இறந்துவிட்டதாக அறிகிறார்.

தனித்து விடப்பட்ட பேரன் ஒரு குடும்பத்தின் அரவணைப்பில் வளர்ந்து ஆளாகிறான். இந்தத் திரைக்கதையில் கலைஞரின் குரல் பேரன் குமார் வளர்ந்து வாலிபனாகி **‘அழகிரி டீக்கடை’** வைக்கும் வரை இடைவெளிவிட்டுத் தொடர்கிறது. அதாவது கதை சொல்லல், காட்சித்துண்டுகள், மீண்டும் கதை சொல்லும் கலைஞரின் குரல் எனத் தொடரும் உத்தி கையாளப்படுகிறது.

### உரத்துப் பேசிய சினிமாக்கள்

திராவிட சினிமாக்கள் குறித்த குறை மதிப்பீடுகளைச் செய்தவர்களின் முதன்மையான வாதம், அவை பேசுகின்றன, அதிலும் ‘உரத்துப் பேசுகின்றன’ என்பதே. திரைப்படம் என்பது காட்சிமொழி, படைப்பு உச்சத்தில் தனது கனத்த மொழியற்ற மௌனத்தால், கலை நயம் மிக்கக் காட்சிமொழியால் ‘பேச்சுக்கான’ இடத்தை நிரப்பி விடுகிறது. இந்தக் கருத்து நிலைப் பாட்டை முற்றிலுமாக மறுத்து விடாமல் மேலே தொடர்வோம்.

**கதையின் மூலம், தாத்தாவின் சொத்தை, அவரது மரணத்துக்குப் பிறகு பேரன், கழுகுக் கூட்டமான உறவுகளின் சதிகளை உடைத்து அடைவதுதான்.**

அந்தப் பேசாப் படங்கள் என்ன ‘பேசின?’. தேசியம், தெய்வீகம், பாவம், புண்ணியம், தியாகம், விதி, மோட்சம் எனும் உச்சாடனங்களால், மனித தன்னூக்கச் செயல்பாடுகளுக்கான முனைப்பை மழுங்கடித்தன. சமூக ஒழுங்கைச் சிதைத்துவிடாமல், அழுத்தும் பண்பாட்டுச் சிடுக்குகளைத் தனிமனித மீறல்கள் வழியாகக் கடப்பது அல்லது மனித இருப்பின் சாத்தியங்களை மீறிய ‘தியாகச் செம்மல்களை’ கொண்டாடுவது. இந்தப் பிணி இன்றும் விலகியதாய்த் தெரியவில்லை.

அறிவியல் கண்டுபிடிப்புகள், நாளும் மாறும் தொழிற்நுட்ப வளர்ச்சிகள், அதன் விளைவான பொருளாதார இயக்கம், அவை வெகுமக்கள் மீது செலுத்தும் விளைவுகள் என அனைத்தையும், ‘தன்னலமற்ற தியாகச் சீல நரேந்திர மோடிகள்’ தீர்த்து வைப்பார்கள் எனும் நம்பிக்கைவாதத்தினை விதைத்தது நேற்றைய ‘குடும்பமற்ற உன்னதத் தனிமனிதன்’ என்பதுதானே. பண்பாட்டு வேர்களில் பீடித்திருந்த மதவாத நோய்மையை அறுத்து எறியாமல், தத்துவ விசாரங்களால் விளக்கிய உன்னதங்களின் விளைவுதானே இன்றைய அவலத்தின் மூலம்.

### நவீனமும் பண்ணையார்த்தனமும்

இதில் வேதனை என்னவென் றால், சமூக மாற்றத்தை சோசலிசப் புரட்சிக் கருத்துகளால் மாற்ற விளைந்தவர்களும், திரைப்படங்களின் ஆக்கம் குறித்த புனிதக் கருத்தியல்களில் சிக்குண்டார்கள். படத்தில் கலைஞரின் ஒரு வரி, ‘இந்த மில் நிர்வாகம் பண்ணையடிமை முறையில் மில் நடத்துகிறது’. வேளாண் பண்ணையும் நூற்பாலையும் உற்பத்திமுறைகளில் முற்றாக மாறியவை. உற்பத்தி உறவுகள் வேறு வேறு. அன்றைய மில் முதலாளிகளின் பண்ணையார்த்தனம் நவீன உற்பத்தி முறை குறித்த அறிவின்மையின் விளைவு எனப் பொட்டிலறைகிறார் கலைஞர்.

தங்கள் நோக்கங்களில் தெளிவான வெகுமக்கள் திரைப்படம் ‘உரத்துதான்’ பேசும். **‘அவன் பித்தனா?’** படத்தின் காட்சிகளின் ஒவ்வொன்றிலும் பேசப்படுபவற்றைப் பட்டியலிடுவது முடியாத வேலை. ஆனாலும், இதோ, ‘பாட்டாளி பாவம்பா... பசியிருக்கும் போது சாப்பிடட்டும், காசிருக்கும் போது கொடுக்கட்டும். எனவே, இங்கே அழகிரி டீக்கடையில் **‘இன்று கடன் நாளை ரொக்கம்’** என்கிறான் கருப்புச் சட்டைக்காரன் நாயகன் குமார். கலைஞரின் கிண்டல் மொழி காட்சிகளின் வெளியெங்கும். ‘என்ன வடை இளைச்சிப் போச்சு அழகிரி. விலைவாசி ஏறுற வேகத்தில வடை இளைச்சிருச்சு அண்ணே’; ‘தம்பி கடன்னா என்ன... கடமைடா’ என்கிறான் அழகிரிக்கு உதவி செய்யும் தம்பியிடம். கடையில் சாப்பிடும் பெண்ணை வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டிருப்பவனிடம், ‘ஏம்பா உனக்குப் பசி கண்ணுலயா? வயித்துலயா?‘ என்கிறான்.

### இளகிய மனம்... இரண்டு வழிகள்...

தேர்தலில் பண விளையாட்டு, பஸ் பெர்மிட, பேக்டரி லைசென்ஸ், கலப்படம், கள்ளநோட்டு, கள்ளமார்க்கெட் என அனைத்தையும் அம்பலப்படுத்தும் கலைஞரின் திரைக்கதையமைப்பு மூலக்கதையின் முகத்தை மாற்றியிருப்பது வெளிப்படை. கதையின் மூலம், தாத்தாவின் சொத்தை, அவரது மரணத்துக்குப் பிறகு பேரன், கழுகுக் கூட்டமான உறவுகளின் சதிகளை உடைத்து அடைவதுதான். ஆனால், கலைஞர், பெரும் பணம் இளகிய மனம் கொண்ட ஒருவனிடம் கிடைக்கும்போது, அவன் முன் இருக்கும் இரண்டு வழிகளைப் பரிசீலிக்கிறார். ஒன்று, அதனை உல்லாசமாக அனுபவிப்பது. மற்றொன்று, தேவையென்போருக்கு வாரி வழங்குவது.

இரண்டாவது வழியில் வாரியிறைப்பவனைச் சுற்றம் ‘பித்தன்’ என்று பட்டம் கட்டித் துரத்துகிறது. கலைஞரின் முத்திரைக் காட்சியான வழக்காடு மன்றத்தில், சுற்றத்தாரும், உதவிப் பெற்றவர்களும் (புத்தி சீராக இருப்பவன் அள்ளி இறைக்க மாட்டான், மில் பங்குகளைத் தொழிலாளருக்கு வழங்குவானா எனும் பொதுப்புத்தியில்) ‘பித்தன்’ எனச் சூட்டும் பட்டத்தை, ‘கயவர்கள் மத்தியில் கடமை கண்ணியம் கட்டுப்பாடு எனப் பேசுவது பைத்தியக்காரத்தனம்தான்’ என வாதிட்டு தளைகளை உடைத்து வெளியேறுகிறான்.

இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன், விஜயகுமாரி, சகஸ்ரநாமம், நாகேஷ், சச்சு ஆகியோர் நடிப்பில் உமையாள் பிக்சர்ஸ் தயாரிப்பில், பார்த்தசாரதி இசையில், ப.நீலகண்டன் இயக்கத்தில், 1966-ஆம் ஆண்டில் இந்தப் படம் வெளியானது.

...படம் விரியும்

## கொஞ்சம் படிங்க, குஜ்ஜூஸ்!

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர் சந்தன்ஜி டாக்கோர். 27 வயதான அந்த இளைஞர், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு குற்றச்செயல் ஒன்றில் ஈடுபட்டதற்காகச் சிறையில் அடைக்கப்பட்டார். எனினும், 2020-இல் அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டது. அந்த சமயம் கோவிட் பெருந்தொற்று பரவிய காரணத்தால், அந்த ஜாமீன் உத்தரவை மின்னஞ்சல் மூலமாக சிறை அதிகாரிகளுக்கு அனுப்பியது குஜராத் உயர் நீதிமன்றம். அப்படி ஒரு மின்னஞ்சல் அனுப்பியதைப் பற்றி சிறை அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த அதிகாரிகளால், அந்த மின்னஞ்சலில் அனுப்பப்பட்டிருந்த ‘அட்டாச்மென்ட்’டை எப்படித் திறப்பது என்று தெரியவில்லை. அதனால், சந்தன்ஜி மேலும் மூன்றாண்டுகள் சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்தது. சமீபத்தில் இந்த விஷயம் உயர் நீதிமன்றத்தின் கவனத்துக்கு வர, ஒரு நாளைக்கு 91 ரூபாய் வீதம், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு இலட்சம் ரூபாயை சந்தன்ஜிக்கு இழப்பீடாக மாநில அரசு தர வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ‘குஜராத் மாடல்’ எல்லாம் பிறகு பார்த்துக்கொள்ளலாம். முதலில் கொஞ்சம் படிங்க குஜ்ஜூஸ்..!

## :ப்ளாஷ்பேக்



பாண்டியன்-பூங்கொடி

### தலைவர் தந்த தேதி!

எங்களுடைய (ச.பாண்டியன் - பூங்கொடி) திருமணம் 01-09-1986 அன்று தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம் கீழத்திருப்பாலக்குடியில் எனது இல்லத்தில் நடத்தலாம் என்று திட்டமிடப்பட்டது. ஆனால், அந்த சமயம் அருப்புக்கோட்டை இடைத்தேர்தல் நடைபெற உள்ளதால், தன்னால் வர இயலாது எனவும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடத்திக் கொள்ளுமாறும் தலைவர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார். நாங்கள் தலைவர் தரும் தேதியில் திருமணம் வைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்து, அவரிடம் தெரிவித்தோம். அதன்படி புரட்டாசி மாதம் 15-ஆம் நாள், அதாவது 01.10.1986 அன்று தலைவர் கலைஞர் தலைமையில், பெரியவர் மன்னை, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, தஞ்சை மாவட்ட தி.மு.க. செயலாளர் கோ.சி.மணி ஆகியோரின் முன்னிலையில் சுயமரியாதைத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

**-ச.பாண்டியன்- பூங்கொடி,**
**கீழத்திருப்பாலக்குடி, மன்னார்குடி வட்டம்,**
**திருவாரூர் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### பெரியார் விழாவில் பொய்

**1977-ஆம் ஆண்டு, செப்டம்பர் 18-ஆம் தேதி அண்ணா மேம்பாலம் அருகே பெரியார் சிலையைத் திறந்து வைத்தார் எம்.ஜி.ஆர். அப்போது திராவிடர் கழகத்தின் சார்பில் கலந்துகொண்ட அன்னை மணியம்மையார், “அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வேண்டுமென பெரியார் போராடினார். முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அதை நடைமுறைப்படுத்த முயன்றும் முடியவில்லை. இந்த அரசு சட்டத்திருத்தம் மூலம் அதை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்” என உருக்கமாகக் கேட்டார். ஆனால் மேடையில் பேசிய எம்.ஜி.ஆர். “கோயில்களையே வேண்டாம் என்ற பெரியார், அர்ச்சகராவது பற்றி பேசினாரா என்ற சந்தேகம் ஏற்படுகிறது” எனக் குறிப்பிட்டார். “பெரியாரின் சிலையைத் திறந்து வைத்துவிட்டு, பெரியாரைப் பற்றி பேசாமல் இவ்வளவு பெரிய பொய்யைச் சொல்லி இருக்கிறார் எம்.ஜி.ஆர்” என பின்னர் அன்னை மணியம்மையார் அறிக்கை வெளியிட்டார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 255




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131